aat SRI LANKA Final Stage
August 17
Veal Biz. Colg.
077 0203201 / 026 222 7622

அறைவு 02 இயம் 04

August 24 - 30, 2013

# மலைமுரசு

MALAIMURASU

வார இதழ்

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

## திருமலை வளாக விவகாரம்

"இந் நடவடிக்கையை எதிர்த்து மாகாணசபையில் தனிநபர் பிரேரணை"



எதிர்க்கட்சித் தலைவர்

# கிழக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்த்த முயற்சி

### "எனக்கு இது பற்றித் தெரியாது.. நீங்கள் எதையும் செய்யுங்கள் - நான் யாரையும் கணக்கெடுக்கப் போவதில்லை" -வளாக முதல்வர்-

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தை மற்றொரு தேசியப் பல்கலைக்கழகமான ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்திடம் கையளிக்கும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டள்ளதாகத் தகவல்கள் கடந்த வாரத் தேசிய பத்திரிகைகள் ஊடாக வெளித்தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை வளாக மாணவர் தலைவருடன் தொடர்புகளை மலைமுரசு ஏற்படுத்தியிருந்தது.

அப்போது கருத்துத் தெரிவித்த வளாக மாணவர் தலைவர் "இவ் விடயத்தை நாங்களும் தெரிந்து கொண்டுள்ளோம் அதற்கு நாங்கள் விரும்பவில்லை. ஆனால் வளாக முதல்வரோ வளாகத்தை ஸ்ரீஜெயவர்தன பல்கலைக்கழகத்தின் கீழ் மாற்ற விரும்புகின்றார். மாணவர்களுக்கு இவ்வாறு மாறுவதால் என்ன நன்மை மேலதிகமாகக் கிடைக்கும் என்பதை தெரிந்துகொள்ளவே மாணவர்கள் விரும்புகின்றனர்" என்றார்.

அனைத்து மாணவர்களும் எப் பல்கலைக்கழகத்தின் கீழ் திருமலை வளாகம் இயங்க வேண்டும் என விரும்புகின்றார்களோ அதனையே தானும் செயற்படுத்த,

### வளாகத்தை மாற்ற முதல்வரே முயற்சிக்கின்றார் -மாணவர்கள்-

விரும்புவதாகத் தெரிவித்த மாணவத் தலைவர் என்ன நன்மைகள் கிடைக்க இருக்கினறன? எனத் தெரியாமல் திருமலை வளாகத்தை மாற்றுவதற்கு மாணவர்களுக்கு சிறிதும் விருப்பமில்லை. ஆனால் முதல்வர் அம் முயற்சியில் குறியாக இருக்கின்றார் என்றும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இவ் விடயத்தைப் பற்றிய முதல்வரின் கருத்தை அறிந்து கொள்ள முதல்தடவை அவரைத்

15

## மூதூரில் கடைகள் உடைப்பு

மூதூர் பிரதான வீதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான 13ற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் இனந்தெரியாதவர்களினால் உடைத்து தேசப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று வியாழக் கிழமை அதிகாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப் படுகின்றது.

வியாபார நிலையங்களின் கூரைகளை உடைத்து உள்நுழைந்துள்ள விஷமிகள் பின்வழியூடாக வெளிச் சென்றுள்ள போதும் பெரும்பாலும் உடைமைகள் எவற்றையும் களவாட வில்லையென வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூரில் பிரச்சினையொன்றை ஏற்படுத்தும் நோக்கில் இயங்கும் சில தீய சக்திகளின் வேலையாக இது இருக்குமென நம்பப்படுகின்றது.

இதேவேளை கடை உடைப்பு சம்பவத்தைத் தொடர்ந்து மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.ஹரீஸ் தலைமையில் முக்கியஸ் தர்களின் அவசர கூட்டமொன்று மூதூர் பிரதேச சபையில்

15

# திருமலையில் நவநீதம்பிள்ளை



ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களின் இலங்கைக்கான வருகைத் திட்டத்தின்படி அவர் எதிர்வரும் செப்டெம்பர் 28ம் திகதி திருகோணமலைக்கு வரவிருப்பதாகத் தெரிகின்றது. அன்றைய தினம் காலை தொடக்கம் மதியம் வரை சந்திப்புக்களை மேற்கொள்ளும் அவர் மாலையில் தற்போதுவரை மீளக் குடியமராத மக்கள் வசிக்கும் கிளிவெட்டி தற்காலிகத் தங்குமிடத்திற்கும் பயணம் செய்யவுள்ளார் எனத் தெரிகின்றது.

15

## உயர்தரப் பரீட்சை நிலையத்தில் மோசடி?

திருகோணமலையின் பிரபல யமான பெண்கள் பாடசாலையில் உயர் தரப் பரீட்சை மேற்பார்வையாளராகப் பணியாற்றிய 28 வருட சேவைக் காலத்தைக் கொண்ட சிரேட்ட ஆசிரியை பரீட்சை மோசடியில் ஈடுபட்டாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது: பொதுப் பரீட்சைகளுக்கான மேற்பார்வை யாளர்களாகவோ அல்லது கண்காணிப் பாளர்களாகவோ நிமிக்கப்படும் போது அவர்கள் சில தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பலவருடங்களாக பரீட்சைத் திணைக்களத்தால் ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்று நிருபங்களில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

அவ்வகைத் தகைமைகளில் ஒன்றான குறித்த அலுவலரது துணை அப்பாடசாலையில் கற்பிக்கக் கூடாது என்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த ஆசிரியையின் கணவர் அவ் ஆசிரியை மேற்பார்வையாளராகப் பணிக்கமர்த்தப் பட்டிருந்த பாடசாலையில் இரசாயனவியல் ஆசிரியராக பணியாற்றும் நிலைமையிலும் குறித்த

15




## உண்மையை மறைக்கின்றார் தவம்

### அமைச்சர் உதுமாலெப்பை குற்றச்சாட்டு

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சம்புக்களப்பு வடிச்சல் திட்டம் வெற்றகரமாக நிறைவு பெறும் சந்தர்ப்பத்தில் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 8,500 ஏக்கர் காணிகளில் நெற் செய்கை மேற்கொள்ள முடியும் என கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆறும், ஆற்றங்கரைப் பிரதேசமும் மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன் முதலாம் கட்ட வேலைகள் மக்கள் பங்களிப்புடன் 56 இலட்சம் ரூபா செலவில் இடம்பெற்று வருவதுடன் "சீபிளேன்" சேவையொன்றையும் மேற் கொள்ளும் நடவடிக்கையின்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 - 0777555738

## வணக்கம்

மாதா, பிதா, குரு, தெய்வம்

நமது தலைமுறையில் மேற்சொன்ன படிமுறையில் தான் வணக்கத்துக்குரியவர்கள் வணங்கப்படுகின்றார்கள்....

தெய்வத்திற்கு முன்பாக எமக்குக் காட்சியளிப்பவர்கள் குரு.

அந்த குருதான் "அறம் செய்ய விரும்பு'' என்ற கருத்தை எம்முள் விதைத்தார்கள்.

இன்றோ "குரு" என்ற கருப்பொருளின் ஆத்மாவை எதுவோ தின்று விட்டது போலத்தான் தெரிகின்றது.

தான் செய்த தவறைத் தவறென்று ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், அத்தவறைச் சரியென்றே வாதிடுபவர்கள், அத்தவறை மூடி மறைக்க முயற்சிப்பவர்கள், அதற்காகத் துணைபோக முன்நிற்கின்ற அதிகாரிகள்..... ஒரு குழுவாக எம் சமூகத்தின் முன் நிற்கின்றது ஒரு கூட்டம்....

அவர்களாவது பறவாயில்லை... குரு ஒருவர் எனக்குச் சொன்னார் ஒரு முறை செய்தால் அது தவறல்ல.... அதைத் தொடர்ந்து செய்தால்தான் அச் செயல் தவறாகும் என்றார்... அற்புதமான விளக்கம்... ஒரு கொலை செய்தால் அது குற்றமில்லை... அதைத் தொடர்ந்து செய்தால்தான் குற்றம்... என்னே அறிவு!...

குருவின் குற்றங்கள் ஒரு சமூகத்தையும் அதன் ஆணி வேரையும் பாதிக்கும் என்பது தான் உண்மை.... அதனால்தான் குரு செய்யும் குற்றங்கள் தண்டனைகளுக்கும் அப்பால் கடும் தாக்கத்தைக் கொண்டமைந்து விடுகின்றன..

குருவைப் பின்பற்றியே அவர் சார்ந்த மாணவக்குழு சமூகத்தை நோக்கிப் பயணிக்கின்றது. அப் பயணம் சரியான திசையில் அமைய வேண்டுமாயின் குரு சரியான திசையில் பயணிக்கவல்லவா? வேண்டும்.

நீங்கள் யோசிக்கலாம்.... குரு தோசமடைந்தால் பரிகாரம் செய்து விடலாம் என்று.... பரிகாரம் செய்வோமா நாம்?....

# இருகொலை – ஒரு தற்கொலை

**"நிச்சயம் செய்த பெண் வேறு சிப்பாயுடன் காதல்"**



தனக்கு நிச்சயம் செய்த பெண் வேறு சிப்பாயுடன் தொடர்பு கொண்டிருந்தார் எனச் சந்தேகப்பட்ட விமானப்படை கோப்ரல் ஒருவர் அவர்கள் இருவரையும் சுட்டுக் கொலை செய்து விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவ்விபரீத சம்பவம் கடந்த 18ம் திகதி காலை வேளையில் நிகழ்ந்துள்ளது.

கோப்ரல் சீனன் குடா வான்படைத் தளத்திலும் அவருக்கு நிச்சயம் செய்யப்பட்ட பெண் அலுவலர் பளிங்குக்கடற்கரை அலுவலகத்தில் தொலைபேசியியக்குனராகவும் கடமையாற்றி வந்துள்ளனர்.

பளிங்குக் கடற்கரை அலுவலகப் பிரதேசத்தில் கடமையாற்றிய மற்றொரு விமானப் படைச் சிப்பாயுடன் அப் பெண்ணுக்குத் தொடர்பிருப்பதாகச் சந்தேகப்பட்ட கோப்ரல் 18ம் திகதி காலை தனது அலுவலகத்திலிருந்து பளிங்குக் கடற்கரை அலுவலகத்திற்குச் சென்றுள்ளார். அங்கு கடமையிலிருந்து மற்றொரு படையினனின் சுடுகலனைப் பறித்தே இக் கொலைகளும் தற்கொலையும் நிகழ்ந்துள்ளன.

சுடப்பட்ட இருவரும் தலத்திலேயே கொல்லப்பட சுட்டவர் இரண்டு நாட்களின் பின்னர் மரணமாகியுள்ளார்.

# கவனிப்பாரற்ற நிலையில் நாச்சிக்குடா சிறுவர் பூங்கா

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு சொந்தமான சிறுவர் பூங்கா கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.


நாச்சிக்குடா பிரதான வீதியில் காணப்படும் இப்பூங்காவை நாச்சிக்குடா, வேப்பங்குடா, மக்களூற்று, வெள்ளைமணல் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் கடந்த 03 ஆண்டுகளாக எந்த விதமான பராமரிப்பும் இன்றி இப் பூங்கா காணப்படுவதால் அதனை பயன்படுத்த முடியாதுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


இப் பூங்காவின் ஒரு பகுதியில் பிரதேச சபை காரியாலயமும், நூலகமும் காணப்படுவதனால் மக்கள் தொடர்ந்து வந்து செல்ல கூடிய பூங்காவாக விளங்கியது. இது தொடர்பாக நாச்சிக்குடாவைச் சேர்ந்த சாறூக் கூறுகையில் "இது நல்லா இருந்திச்சி, பிறகு இவங்க கவனிக்கேல்ல. கடந்த மூன்று வருசமா இப்படித்தான் கிடக்கு. எங்கட பிள்ளைகள் பூங்கா இருந்தும் விளையாட வழியின்றி இருக்கு. அப்படி மோசமான நிலையில் இந்த சிறுவர் பூங்கா இருக்கு." என்றார்.

மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் பௌசான் கூறுகையில் "இந்த யூசி காரர்களுக்கு இது கண்ணுக்குத் தெரியலை போல. இப்பூங்காவில் உள்ள கிணறும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் நூலகத்திற்கு வருகின்றவர்கள் கூட நீரைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சனையை எதிர்நோக்குகின்றனர்." எனக் கூறினார்.

மு.முனாஸ் முகமட்



## வீட்டினுள் கழிவு நீர்



திருமலையில் இருந்து நிலாவெளிக்கு செல்லும் வழியில் ஜமாலியாவை அண்டிய ஜின்னா நகர் லவ்லேன் தேசிய வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வசிக்கும் சுமார் 100 குடும்பங்கள் கழிவுநீர் வீட்டிற்குள் புகுவதால் மிகவும் அசௌகரியமான நிலையை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக் கின்றனர்.

1987ம் ஆண்டு சமுர்த்தி அமைப்பினால் எமது கிராமத்தில் கால்வாய்கள் கட்டப்பட்டதாகவும், கட்டிய காலத்தில் இருந்து இதுவரையில் இக்கால்வாயினை சுத்தம் செய்வதற்கு கூட எவரும் முன் வரவில்லை எனவும், இவ்விடயம் தொடர்பாக எத்தனையோ தடவைகள் நகரசபை, மற்றும் பிரதேச சபையினருக்கு கடிதம் மூலம் அறியத்தந்தும் எவரும் எமது மக்களின் பிரச்சனையை தீர்க்க முன்வரவில்லை எனவும் தெரிவித்தனர்.

இக்கிராமத்தில் கட்டப்பட்ட கால்வாயினூடாக கழிவு நீர் வெளியேற்றப்படும் பகுதியில் ஜமாபுரம், சுமேதகம, சம்மந்தபுரம், தக்வா நகர், விஜிரா நகர், ஜமாலியா, நாகலர் வீதி, முருகாபுரி, ஆகிய கிராமங்களில் இருந்து வரும் வடிகால் கழிவு நீர் அனைத்தும் மூன்று கால்வாயினூடாக ஒரே இடத்தில் சந்திக்கிறது. இவ்விடத்தில் இருந்தே கடற்கரை வழியாக இக்கழிவு நீர் கடலில் கலக்கிறது.

வெளியேற்றப்படும் கால்வாயின் கொள்ளளவு போதாத காரணத்தினால் அதனுள் கழிவுநீர் நிரம்பவே சற்று தாழ்வாக இருக்கும் எமது கிராமத்திற்குள் கால்வாய் வழியாக மீண்டும் எமது வீடுகளுக்குள்ளேயே கழிவுநீர் தஞ்சமடைகிறது. மழைகாலம் தொடங்கி விட்டால் எமது மக்கள் மிகவும் மோசமான விளைவை எதிர்நோக்க வேண்டி வரும் என்றும், கழிவுநீர் வெளியேற்றப்படாமல் தேங்கி இருப்பதால் டெங்கு போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக அக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(அனுர-உதயா)

## திருமலையின் அழகிய காணிகள் தனியாருக்கு விற்பனை

திருமலையின் கடல்சார் பிரதேசங்களை அண்டியுள்ள அழகிய நிலப்பரப்புக்களை அபிவிருத்தியென்ற பெயரால் சுவீகரித்து தனியாருக்கு விற்பனை செய்யும் முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும என கோரிக்கைகள் எழுந்துள்ளன.

மூதூருக்கும் கிண்ணியாவிற்கும் இடைப்பட்ட உப்பாறு தொடக்கம் கங்கைக்கரை வரையிலான பிரதேசத்திலுள்ள சுமார் 390 ஏக்கர் காணிகளுக்கே இந் நிலை ஏற்பட்டுள்ளது. இப் பிரதேசத்தைக் காக்கும் பொறுப்பு கிழக்கு மாகாண சபைக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

## நவி.பிள்ளையிடம் சர்வதேச விசாரணைக்குக் கோருவோம்

இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் சர்வதேச விசாரணைகளை நடத்த அம்மையார் முயற்சிக்க வேண்டும் என்ற விடயத்தையே த.தே.கூ வலியுறுத்தும் என அதன் சிரேட்ட உறுப்பனரான மாவை தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பாக தம்மால் தயாரிக்கப்பட்ட ஆவண மொன்றையும் அம்மையாரிடம் கையளிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தள்ளார்.

## ஷிராணி சந்திப்பார் – பொன்சேகா சந்திக்க அனுமதிக்க வேண்டும்

இலங்கை வரும் நவநீதம் பிள்ளையைப் பதவி பறிக்கப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா சந்திக்கவுள்ளார்.

அதேவேளை முன்னாள் இராணுவத் தளபதியும் இன்னாள் அரசியல்வாதியுமான சரத் பொன்சேகாவை அவர் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என ஐ.தே.க வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நவிபிள்ளை அறிக்கை தயாரிப்பதற்காகவே வருகை தருகின்றார்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனிதவுரிமைச் சபைக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக அறிக்கையொன்றைத் தயாரித்து முன்னளிக்க வேண்டிய தேவைப்பாடு நவிபிள்ளைக்கு இருப்பதால் அதற்கான தகவல்களைத் திரட்டவே அவர் இலங்கைக்கு வருகைதரவுள்ளார் என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகை அழகுபடுத்திய திருகோணமலை லியோ கழகம்....

திருகோணமலை நகர லியோ கழகத்தின் செயல்திட்டங்களில் ஒரு அங்கமாக திருகோணமலை கடற்கரை சூழலை சுத்தம் செய்தமை கடந்த 20 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் நடைபெற்றது. திருகோணமலை நகரசபைத் தலைவர் திரு.க.செல்வராஜா அவர்களின் வழிகாட்டலின் கீழ் இச் செயல்திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இச் செயல்திட்டத்துக்கு தேவையான உபகரணங்கள் பொதுச் சுகாதார திணைகளத்தின் ஊடக வழங்கப்பட்டன.

காலை 6.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயல்திட்டமனது காலை 9.30 மணியளவில் நிறைவடைந்தது. இச் செயல்திட்டத்தில் லியோ கழகம் சார்பாக லியோ தனுஜன், லியோ ஹரிபிரசாத், லியோ சுதர்சன், லியோ இர்சாத், லியோ சசியானந்த், லியோ பவானந்தன், லியோ ரொபான் ஆகியோர் பங்கெடுத்தனர்.

கடற்கரை சூழல் சுத்திகரிப்பு செயல்திட்டம் நிறைவுறும் தருவாயில் பொது சுகாதார பரிசோதகர்களன திரு.S.உதயகுமார் மற்றும் திரு.G.சரவணபவன் ஆகியோர் சூழலை பார்வையிட்டு லியோ கழகத்திற்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர். அத்துடன் இவ்வாறான செயல்திட்டங்களுக்கு தங்களால் ஆனா உதவிகளையும் வழங்குவதாக தெரிவித்தனர்.




## வாரம் ஒரு சலனப்படம்

வேலை கடுமையாக நடைபெறும் இடம் ....




படப்பிடிப்பு ராம்

நீங்கள் பதிவு செய்யும் வித்தியாசமான படங்களையும் எமக்கு அனுப்பி வையுங்கள்




# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு வதிவிடப் பயிற்சி



தமிழ் மொழிப் பிரிவுக் கா்.ன விரிவுரையாளர் வி.என்.எஸ்.உதயச் சந்திரன் நெறிப் படுத்தியிருந்தார்

அரச பாடசாலைகளுக்கு அண்மையில் நியமனம் செய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் இதுவரைப் பயிற்றப்படாத ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கும் தேசிய திட்டத்திற்கு அமைவாக கல்வியமைச்சின் உதவியுடன் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட ஆறுநாட்கள் வதிவிடப் பயிற்சிச் செயலமர்வு அண்மையில் மகரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதான கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது. இதனை கல்வி நிறுவகத்தின் முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வி

இச் செயல மர்வில் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலிருந்து கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மட்டக்களப்பு மேற்கு, கல்குடா, பட்டிருப்பு மற்றும் திருகோணமலை மாவட்டத்திலிருந்து திருகோணமலை, மூதூர், கிண்ணியா ஆகிய பிரதேசத்திலுள்ள கல்வி அலுவலங்களிலிருந்தும் ஆரம்பக் கல்விக்கான அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மாயில்)

# கற்பாறைகளுக்கு நடுவில் சிறுவனின் சடலம்

தற்போதுவரை அடையாளங் காணப்பட முடியாத பதினொரு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனின் சடலத்தை காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

ஓட்டமாவடி மடுவத்து வீதிப்பகுதியில் காணப்படும் கற்பாறைகளுக்கு நடுவில் இடைவெளியொன்றில் கிடத்தப்பட்டிருந்த இச் சிறுவனின் உயிரற்ற உடலை கருங்கற்களால் மூடிச் சென்றிருக்கும் விதத்தைப் பார்க்கும் போது, இச் செயல் ஒரு திட்டமிட்ட கொலையாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுவதாக அங்கிருக்கும் எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அப் பகுதிக்கு மாடு மேய்க்கச் சென்றவரின் கண்களுக்கு இச் சடலம் தட்டுப்பட்டதை அடுத்து வாழைச் சேனைக் காவல்துறையினருக்கு இவ் விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுவரை அச் சிறுவனின் சடலம் அடையாளங் காணப்படாத போதிலும் அதே வயதையொத்த செம்மண்ஓடை, பாடசாலை வீதியைச் சேர்ந்த மீறாலெப்பை முஹமட் ஹிமாஸ் என்ற சிறுவனை 17ம் திகதி முதல் காணவில்லை என காவல்துறையில் புகாரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(கிருஸ்ணா)





# கழிவு நீர் தேங்கும் திருமலைக் கடற்கரை

திருகோணமலை பட்டினமும் சூழலும் நகர் பகுதிக்கு உரித்துடைய இக்கடற்கரையானது தற்பொழுது முறையற்ற கழிவு நீர் போக்கு காரணமாக மாசடைந்து போயுள்ளது. இதனால் இதன் அழகும் தனித்தன்மையும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் நோய்களை உருவாக்குமோ என்ற அச்சமும் காணப்படுகின்றது (இவான் கனி)



# காவல்துறை குற்றச்சாட்டு : நீதிமன்றம் விடுதலை

மட்டக்களப்பில் திடீரென அறிமுகப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சட்டமொன்றை அடுத்து அச் சட்டத்தை மீறினார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட நூற்றுக்கணக்கானவரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

போக்குவரத்துக் காவல் துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து செல்பவர்கள் இரண்டு புறமும் கால்களைப் போட்டுச் செல்ல வேண்டும் என்ற சட்டத்தை மீறிய நூற்றுக்கணக்கானவர்களே மட்டக்களப்பு நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்ட போது தண்டனையின்றி விடுவிக்கப்பட்டனர்.

இவ் விடயம் தொடர்பாக ஏற்கனவே அரச அதிபர், பிரதிக் காவல்துறை மாஅதிபருடன் கலந்துபேசி அச்சட்டத்தை நீக்குவதற்கு செய்திருந்தார்.

# மனிதவுரிமைப் பயிற்சிப் பட்டறை

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, குச்சவெளி, மூதூர் மற்றும் பட்டிணமும் சூழலும் கிராம சேவை உத்தியோகத்தர், மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் "மனித உரிமை தொடர்பாக அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவும் எகெட் கரித்தாஸ் நிறுவனமும் இணைந்து ஒரு நாள் பயிற்சிப் பட்டறை அலஸ்தோட்ட தீபம் வளவாளர் நிலையத்தில் இடம் பெற்றது. இதில் திருகோணமலை பிராந்திய இணைப்பாளர் திருமதி குளோரி பிரான்சிஸ் வளவாளராக கலந்து சிறப்பித்தார். (கதிரவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன்சிங் – கடைசிவரை அவிழ்க்காத முடிச்சு

-கே. சஞ்சயன்-

கொழும்பில் நடக்கவுள்ள கொமன்வெல்த் உச்சி மாநாட்டுக்கான அழைப்பிதழை, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கையளித்து விட்டுத் திரும்பியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். கடந்த திங்கட்கிழமை புதுடெல்லியில் ரேஸ்கோஸ் வீதியில் உள்ள இந்தியப் பிரதமரின் அதிகாரபூர்வ வதிவிடத்தில் வைத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொடுத்தனுப்பிய அழைப்பிதழ், மன்மோகன்சிங்கிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

அதைப் பெற்றுக் கொண்ட அவர், கொமன்வெல்த் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டுள்ளார். மாநாட்டுக்கு வருவேன், நிச்சயம் கலந்து கொள்வேன் என்று எந்த வாக்குறுதியையும் மன்மோகன்சிங் கொடுக்கவில்லை.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸிடம் மட்டுமல்ல, இது குறித்து வெளிப்படையாக இப்போதைக்கு அவர் எந்தக் கருத்தையும் வெளியிடப் போவதில்லை என்பதே உண்மை. ஏனென்றால், கொமன்வெல்த் மாநாடு குறித்தும் அதில் பங்கேற்கும் மட்டம் குறித்தும் முடிவுகளை எடுக்கும் விவகாரத்தில், இந்தியாவுக்கு வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு அப்பாலும் சில அழுத்தங்கள் உள்ளன.

குறிப்பாக, இலங்கை தொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள கருத்துகளை மன்மோகன்சிங்கினாலோ அவரது அரசாங்கத்தினாலோ அவ்வளவு இலகுவாக புறக்கணித்துச் செயற்பட முடியாது. கொமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றே தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கட்சிகளும் தலைவர்களும் கருதுகின்றனர்.



இதற்கு வெளிப்படையாக யாரும் இதுவரை எதிர்ப்புத் தெரிவிக்காவிட்டாலும், சுப்பிரமணியன் சுவாமி போன்ற விரல் விட்டு எண்ணி விடத்தக்கவர்கள் தமிழ்நாட்டில் இருக்கத் தான் செய்கிறார்கள். ஆனாலும், அவர்கள் புறக்கணிக்கத்தக்களவாகவே உள்ளதால், பெரும்பாலானோரின் கருத்தாக, கொமன்வெல்த் மாநாட்டுப் புறக்கணிப்புக் கோரிக்கையே உள்ளது.

அரசியலில் எப்போதுமே கீரியும் பாம்புமாகச் செயற்படும் திமுகவும், அதிமுகவுமே இந்த விடயத்தில் ஒன்றுபட்டு நிற்கும் போது, இவற்றில் ஏதாவதொரு கட்சியுடனேயே, கூட்டணி வைத்துப் பழகிவிட்ட காங்கிரஸ் கட்சிக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொமன்வெல்த் மாநாட்டைப் பொறுத்தவரையில், முடிவுகளை எடுப்பதற்கு இந்தியாவுக்கு மூன்று தெரிவுகள் உள்ளன. இலங்கை அரசாங்கம் எதிர்பார்ப்பது போன்று, முழுஅளவில் மாநாட்டில் பங்கேற்பது முதலாவது தெரிவு. தமிழ்நாட்டின் கருத்துகளுக்கு மதிப்பளித்து ஒட்டுமொத்த மாநாட்டையும் புறக்கணிப்பது இரண்டாவது தெரிவு. தமிழ்நாட்டின் கருத்துகளை மதித்து - அதேவேளை, இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல், கீழ்மட்டக் குழுவை அனுப்புவது மூன்றாவது தெரிவு.

மன்மோகன்சிங் தலைமையிலான அரசும், காங்கிரஸ் கட்சியும் இந்த மூன்றில் ஒன்றையே தெரிவு செய்தாக வேண்டும்.

ஆனால், இந்த முடிவுகளில் எதை எடுத்தாலும், இந்தியாவின் மத்திய அரசுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் நிறையவே சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். முதலாவது தெரிவான, இலங்கையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில், முழுஅளவில் பங்கேற்பது மத்திய அரசு மீது, தமிழ்நாட்டின் விரோதத்தை சம்பாதிக்க வைக்கும். மத்திய அரசு ஏழு கோடி தமிழர்களினதும் கருத்தை அவமானப்படுத்தி விட்டதான பழிச்சொல்லுக்கு இலக்காக நேரிடும்.

அதேவேளை, இந்தியாவின் கருத்தையும், இந்தியாவுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும் இலங்கை மதிக்கவோ, நிறைவேற்றவோ இல்லை என்ற கருத்து இந்திய அரசிடம் உள்ளது. எனவே, தமிழ்நாட்டின் வலுவான புறக்கணிப்பு அழைப்புகளை உதாசீனம் செய்து கொண்டு, கொமன்வெல்த் மாநாட்டுக்கு முழுஅளவிலான பிரதிநிதிகளை அனுப்பினால், இந்தியாவை மேலும் அவமதிக்க இடமளித்ததாகவும் ஆகி விடும்.

இரண்டாவது தெரிவான, முழு அளவில் மாநாட்டைப் புறக்கணிப்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் மிகவும் சிக்கலானதும் இக்கட்டானதுமான முடிவாகவே இருக்கும். அண்டை நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ளும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை இதனால் கேள்விக்குள்ளாகும்.

ஏனென்றால் இது இலங்கை நடத்துகின்ற [illegible] முற்றிலும் இலங்கையின் நலன்கருதி, இலங்கைக்காக நடத்தப்படுகின்ற மாநாடு அல்ல. 54 நாடுகளின் தலைவர்கள் கூடுகின்ற ஒரு சர்வதேச மாநாடு. இதில் பங்கேற்பதால், உலகத் தலைவர்களை சந்தித்து பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கும். அது இந்தியாவுக்கு அரசியல், பொருளாதாரம், இராஜதந்திரம், பாதுகாப்பு போன்ற துறைகளில் நலன்களை ஏற்படுத்தித் தரக் கூடிய ஒரு களம். இத்தகையதொரு வாய்ப்பை இந்தியாவினால் முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

இலங்கை என்ற ஒரு நாட்டுக்காக, ஏனைய 52 நாடுகளினதும் நட்புறவு வாய்ப்புக்களை புறக்கணிப்பது நியாயமா என்று கேள்வி எழும். எனவே, மாநாட்டில் முழுஅளவில் பங்கேற்பதற்கு இந்தியா எந்தளவுக்கு யோசிக்குமோ, அதைவிட இன்னும் அதிகமாக முற்றிலும் புறக்கணிப்பதற்கு யோசிக்கும், பின்நிற்கும்.

அடுத்து, மூன்றாவது தெரிவையே இந்தியா அதிகம் விரும்பக் கூடும்.

தமிழ்நாட்டின் கருத்துக்கும் மதிப்பளித்துக் கொண்டு, இந்திய வெளிவிவகாரக் கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல் நடந்து கொள்ளும் இந்தத் தெரிவு தான், இந்தியாவுக்கு இருக்கும் தெரிவுகளிலேயே மிகவும் யதார்த்தமானது.

அதாவது, இலங்கை எதிர்பார்க்கின்ற அளவுக்கு முழு அளவிலான உயர்மட்டக் குழுவையும் அனுப்பாமல், அதேவேளை, தமிழ்நாட்டின் கோரிக்கைகளை முற்றிலும் புறக்கணிக்காமல், நடந்து கொள்வதே இது.

இத்தகையதொரு முடிவை எடுப்பது குறித்து இந்தியா அதிகம் யோசிக்க வேண்டியிருக்காது. ஏனென்றால், அது இலங்கை, தமிழ்நாடு என்ற இருதரப்புகளினது தெரிவுகளுக்கு நடுவேயுள்ள ஒன்று. இத்தகைய முடிவை இந்தியா எடுத்தால், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கொமன்வெல்த் மாநாட்டுக்கு வரமாட்டார். அது தமிழ்நாட்டைத் திருப்திப்படுத்தும், அதேவேளை, ஓர் அமைச்சர் மட்டக்குழுவை அனுப்பி வைப்பதன் மூலம், தலை வராது போனாலும் தலைப்பாகையாவது வந்ததே என்று இலங்கையும் திருப்தி கொள்ளும்.

மேலும், இந்தியப் பிரதமராக மன்மோகன்சிங் 2004இல் பதவியேற்றதில் இருந்து, அதற்குப் பின்னர் நடந்த எல்லா கொமன்வெல்த் மாநாடுகளுக்கும் செல்லவில்லை. 2005இல் மால்டாவில் நடந்த மாநாட்டுக்கும், 2011இல் கடைசியாக நடந்த மாநாட்டுக்கும் அவர் செல்லவில்லை.

2007இல் உகண்டாவிலும், 2009இல் ரினிட்டாட் அன்டுபாகோவில் நடந்த மாநாட்டிலும் தான் அவர் பங்கேற்றுள்ளார். எனவே, கொழும்பு மாநாட்டையும் அவர் ஏதேனும் காரணத்தைக் கூறி தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், இவற்றில் எந்த முடிவையும் இந்திய அரசினால் உடனடியாக எடுத்து விடமுடியாது. அவ்வாறு எடுத்தால் ஆபத்தானதாகி விடும். ஏனென்றால், வடக்கு மாகாணசபைக்கு நியாயமான தேர்தலை நடத்துவது, 13ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாப்பது உள்ளிட்ட பல விவகாரங்களில், கொமன்வெல்த் மாநாட்டை வைத்து இந்தியா காய்களை நகர்த்தி வருகிறது. எனவே புறக்கணிப்பை அறிவித்தால், இவையிரண்டும் கேள்விக்குள்ளாகி விடும்.

அதுபோலவே, மாநாட்டுக்கு செல்லப் போவதாக அறிவித்தால், தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடிக்கவும், அரசியல் எதிர்ப்பலை உருவாகவும் காரணமாகிவிடும். எனவே முடிந்தளவுக்கு இந்திய அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனத்தைக் காக்கவே முற்படும்.

எத்தகைய முடிவு எடுக்கப்பட்டாலும், அதை இந்தியா கடைசிநேரம் வரைக்கும் வெளியிடாமல் இருக்கும். அல்லது முடிவு எடுப்பதை கடைசி நேரம் வரை இழுத்தடிக்கும்.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் இலக்கைக்கு எதிரான தீர்மானத்தின் மீது எப்படி வாக்களிப்பது என்று ஒரு சில மணிநேரத்துக்கு முன்னர் முடிவு செய்தது போலக் கூட புதுடெல்லி நடந்து கொள்ளலாம்.

எவ்வாறாயினும், முழு அளவில் மாநாட்டில் பங்கேற்பது என்று முடிவு தவிர்ந்த, இந்தியா எடுக்கப் போகும் எத்தகைய முடிவும், இலங்கைக்கு சாதகமாக இருக்காது. ஏனென்றால், இந்தியா பாதி அளவில் பங்கேற்றாலோ, முழுஅளவில் புறக்கணித்தாலோ இலங்கைக்கு அவமானமாகி விடும்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை தனிப்பட்ட ரீதியாக அழைத்தும் வராமல் போனால், அது இலங்கையை மிகவும் அவமானப் படுத்தியதாகி விடும்.

ஏனென்றால், மன்மோகன்சிங் 2005இலும், 2011இலும் பங்கேற்காத மாநாடுகளில் இத்தகைய சிறப்பு அழைப்பு அவருக்கு கொடுக்கப் பட்டிருக்கவில்லை.

எல்லாத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது போலவே அழைக்கப்பட்டார். சிறப்பாக அழைக்கப்பட்ட தலைவர் வராமல் போனால், அந்த மாநாடு தோல்வி என்று தானே அர்த்தம்.

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிரட்டல்களுக்குப் பணிய மாட்டோம்

**-அனந்தி எழிழன்-**

"மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் என்னை அடி பணிய வைக்க முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை வேட்பாளர் அனந்தி எழிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்நகரில் புதன்கிழமை நடைபெற்ற ஆர்பாட்டம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"யாழ்.நகரில் ஆளும்தரப்பும் அதனது பங்காளிகளும் இணைந்து கண்டன ஊர்வலமெனும் நாடக மொன்றை அரங்கேற்றியிருக்கின்றனர். ஜெனீவாவில் இலங்கை விவகாரம் கையிலெடுக்கப்படுகின்ற வேளையில் எல்லாம் முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் அதன் பின்னணிகள் பற்றி எமது மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அதிலும் மக்கள் எனும் பேரினில் இவ் ஊர்வலங்களின் பின்னாலிருக்கும் தரப்புக்களையும் எமது மக்கள் நன்கே அறிந்திருக்கிறார்கள்.

இலங்கையின் ஜனநாயக அரசியலில் மக்கள் உணர்வுகளை காலில் மிதித்து அவர்களது கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு தடைப்போட்டு சட்டத்தை கையிலெடுப்பவர்கள் தமக்குதாமே எந்தவித அனுமதியும் பெறாது சுலபமாக கண்டன ஊர்வலங்களை நடத்த முடிகின்றது.

அதுவே தமிழ் தரப்புக்களாயின் எத்தனை தடைவை நீதிமன்ற படியேற வேண்டியிருக்குமென்பதும் மக்கள் அறிந்ததே.

புதன்கிழமையும் யாழ்.நகரினில் நடந்த ஊர்வலம் அத்தகையது என்பதை எமது மக்களிற்கு சொல்லி தெரியப்படுத்த வேண்டிய தேவையில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப் பினையும் அதிலும் குறிப்பாக என்மீதும் சேறுபூசும் வகையிலும் அழைத்துவரப்பட்டவர்கள் கைகளினில் திணிக்கப்பட்ட சுலோக அட்டைகளும் நோக்கத்தை தெளிவாக்கி நிற்கின்றது.

அதிலும் தமிழை அப்பட்டமாக கொலைசெய்து கொச்சையாக எழுதப்பட்ட சுலோக அட்டைகள் எவரால் அவை எழுதப்பட்டவை என்பதை சொல்லி நிற்கின்றன. இவற்றிற்கு அப்பால் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திற்கென கிழக்கிலிருந்து பலாத்காரமாக அழைத்துவரப்பட்ட போராளிகள் பற்றியும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் என்னை அடிபணியவைக்க முடியாதென்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதை மீண்டுமொருமுறை சொல்லிக் கொள்ளவிரும்பும் அதேவேளை எனது மக்களிற்காக நான் குரல் எழுப்புவதினில் பின்வாங்கப் போவதில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

முள்ளிவாய்க்காலில் இருந்து கணவனையும் பிரிந்து அநாதரவாக எனது மூன்று பெண் குழந்தைகளுடன் வந்த என்னை என் தேசமும் உறவுகளுமே அடைக்கலம் தந்து மீட்டெடுத்தனர்.

அவ்வகையில் நான் எனது தேசத்திற்கும் மக்களிற்கும் மரணிக்கும்வரை விசுவாசமாக இருக்கவேண்டியவளாக இருக்கின்றேன்.

காணாமல் போயுள்ள எனது கணவர் முதல் அனைத்து காணாமல் போனவர்களிற்காகவும் நான் குரல் எழுப்பியே வருகின்றேன்.

சிறைகளினில் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுமின்றி தடுத்துவைக்கப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளது விடுதலைக்காக நான் தொடர்ந்தும் குரல் எழுப்புவேன்.

பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களது மேம்பாட்டிற்கும் முன்னாள் போராளிகளது நிம்மதியான வாழ்விற்காகவும் நான்போராடுவேன். எந்தவொரு மிரட்டலுமோ அச்சுறுத்தும் ஊர்வலமோ என்னை தடுக்கப்போவதில்லை.

இவற்றையெல்லாம் நான் தேர்தலில் குதிப்பதற்கு முன்னதாக சந்தித்திருக்கிறேன். அச்சுறுத்தலற்ற வாழ்க்கையை நான் எப்போதோ தொலைத்துவிட்டேன்.

எமது மக்களை போல என்னிடமும் இழப்பதற்கு ஏதுமில்லை என்பதை சொல்லிக்கொள்வதுடன் மக்களிற்காக சமரசமின்றி குரல் எழுப்புவேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**"இழந்ததும், பிரிந்ததும் துணையைத்தானேயொழிய துணிவையல்ல"**

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிரந்தர மாதச் சம்பளம்

(மீனோடைக்கட்டு: எம்.பைஷல் இஸ்மாயில்)



பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இவ் வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடத்திலிருந்தாவது நிரந்தர மாதாந்த சம்பளம் வழங்குவதற்கான விரைந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜித் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தினால் முதற் தடவையாக கிழக்கு மாகாணத்தில் ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வி அபிவிருத்திக்கான கற்பித்தலுடனான செயற்பாடுகள் மற்றும் ஆசிரியைகளுக்கான வழிகாட்டல் கை நூல் மட்டக்களப்பில் வைத்து வெளியீட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாலர் பாடசாலை பணியகத்தின் தவிசாளர் பொன் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இப்பாலர் பாடசாலைப் பணியகத்தினை நாங்களும் முன்நோக்கோடு செயற்படுத்தி வருகிறோம்.

கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான சிப்லி பாறூக், எம்.அமீர் பிளான் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வதிவிட பணிப்பாளர், முதலமைச்சரின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## பிசாசுகளை விரட்டப் படையினர் உதவி



மட்டு-வாகரைப் பிரதேசத்திலுள்ள புச்சாக்கேணிக் கிராமத்தில் பிசாசுகளால் பிடிக்கப்பட்டிருந்த குடும்பமொன்றை அப் பிசாசுகளின் கையிலிருந்து மீட்கும் பணியைப் படையினர் மேற்கொண்டு அம் முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

இக்கிராமத்தில் வசித்து வந்த ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்று பல காலங்களாக பிசாசுகளின் பிடியில் சிக்கி அவலச் சத்தங்களை எழுப்பியும், தங்களை மறந்து ஆடியும் பல இன்னல்களை அனுபவித்து வந்துள்ளன. இதனைக் கேள்வியுற்ற படையினர் பேய் விரட்டுவதில் பிரபல்யமான மாவத்தகம ஆனந்த தேரர் மற்றும் அளுத்கம பன்சார தேரர் ஆகியோரை அழைத்து வந்து இப் பிசாசுகளை விரட்டி அக் குடும்பத்தை மீட்டுள்ளனர்.



## எத்தனை காலம் தான்......?

நியாயத்தை ஏற்று நேர்மையாகவும், உண்மையாகவும், வாழ்வது என்பது இன்றைய காலகட்டத்தில் பெரும் கடினமான காரியமே. இருப்பினும் எம்மால் இயன்றளவில் வாழ்வது மிக சிறப்பானதென சகல சமயங்களும் நல் அறிவுரைகள் ஊடாக எமக்கு வழிகாட்டுகின்றன.

உள்ளூராட்சி நிறுவனமொன்றில் சிற்றூழியராக கடமையாற்றி மிக அண்மையில் ஓய்வு பொற்றிருந்த அந்த குடும்பஸ்தனுக்கு இதுவரைகாலமும் தன் குடும்பத்தினருடன் வாழ்வதற்கு ஒரு தகுந்த இருப்பிடம் இல்லை. சீதனமாக கொடுக்கப்பட்ட காணித்துண்டையும் மனுஷன் விற்றுவிட்டார்.

தனது சொந்த மதத்தை கைவிட்டு இன்னுமொரு மதத்தை தாவி தான் சிறந்த பக்திமான் என காட்டிக்கொள்ள நாளாந்தம் இரவில் ஊரே அதிரும் வகையில் ஜெபித்ததால் அவரின் வீட்டுக் கூரைமீது விழும் கற்களுக்கு குறைவே இல்லை.

அவர் மேல் கருணை கொண்ட இவ்வூர் பரோபகாரியொருவர் தம்மிடமுள்ள காணிகளில் ஒன்றை தற்காலிகமாக குடியிருக்க வழங்கியிருந்தார். குறித்த பரோபகாரி கொழும்பில் கடமையாற்றுவதால் அவரது காணியை பராமரிக்க இவர் உதவுவார் என்ற நோக்கத்திலே அந்த உதவியைச் செய்ய முன்வந்தார்.

காலங்கள் வேகமாக ஓடின. பரோபகாரியான நபர் கொழும்பில் இருந்து ஓய்வு பெற்று சொந்த ஊருக்கு தமது குடும்பத்தினருடன் திரும்பினார். தற்காலிகமாக குடியிருக்கக் கொடுத்த காணியில் வீடொன்றை கட்டத் தீர்மானித்து வங்கியில் கடனும் பெற்றிருந்தார். இருந்தாலும் அந்த குடும்பஸ்தனுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் தனது காணியின் பின்புறத்தில் நிரந்தரமாக குடியிருக்க ஓர் ஏற்பாட்டை செய்திருந்தார்.

பரோபகாரியின் பின்புறம் அரச திணைக்களமொன்றின் ஒதுக்கீட்டுக் காணியாகும் (Reservation Land) ஆனால் அக்காணித்துண்டு நீண்ட காலமாக அவரின் சொந்தக் காணியுடன் இணைத்து வேலியிடப்பட்டிருந்தது.

அவ்வாறே அவ்வூரில் பலருடைய காணிகள் அருகில் உள்ள ஒதுக்கீட்டுக் காணிகளுடன் இணைத்து வேலியிடப்பட்டுள்ளன. இவ்வாறு வேலியிடுவதற்குக் காரணம் அத்துமீறி வேறொருவர் ஒதுக்கீட்டுக் காணிக்குள் உட்புகுதலைத் தடுப்பதற்காகும்.

குறித்த திணைக்களத்திற்குரிய காணிகள் தேவைப்படும் போது இவற்றை விடுவிப்பதில் எவ்வித சிக்கல்களும் ஏற்படவாய்ப்பில்லை. ஆனால் இந்த ஒதுக்கீட்டுக் காணிகளில் நிரந்தர கட்டடங்களை அமைக்கவோ, நிரந்தர மரங்களை நடவோ முடியாது. திணைக்களத்திற்குரிய ஒதுக்கீட்டுக் காணிகள் எவருக்கும் சொந்தமில்லை இதைமீளக் கொடுக்க எச்சந்தர்பத்திலும் எவரும் தயாராக இருத்தல் வேண்டும்.

எப்படியோ அந்த ஒதுக்கீட்டு காணி பரோபகாரிக்கு சொந்தமில்லை என தெளிவாக தெரிந்து கொண்ட குடும்பஸ்தன் அதை தனக்கு சொந்தமாக்கிக் கொள்ள திட்டம் வகுத்தார்.

பரோபகாரியின் மனதில் எந்தவித வஞ்சகமும் இல்லாததால் குடும்பஸ்தனுக்கு மேலும் மேலும் உதவி செய்வதில் அவர் பின் நிற்கவில்லை. நல்லவர்கள் மனதில் என்றுமே நல்லவையே விதைக்கப் பட்டிருக்கும். அதனால்தான் அந்த அறுவடைகளுக்கும் எவ்வித தீங்கும் ஏற்படுவதில்லை.

குடும்பஸ்தன் [illegible] அளித்து தனது மனைவியின் பெயரிலே ஒதுக்கீட்டுக்காணிக்கு வருடாந்த அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றிருந்தார். அந்த அனுமதிப்பத்திரம் ஊடாக அவ்வப்போது அரசினால் வழங்கப்பட்டுவரும் சகல மானியங்களையும் அவர் பெறத்தவற வில்லை. தற்பொழுது குடும்பஸ்தன் ஒரு காணிக்கு உரித்தாளியாகி விட்டார். அந்த மமதையில் காணியை பிரிக்கும் வகையில் அங்கு ஒரு உயிர்வேலியையும் அமைத்துவிட்டார்.

"இது என்ன புதுசாக வேலி போட்டிருக்கிறாய், உனக்கு என்ன நடந்தது" என்று கேட்டார் பரோபகாரி. "அந்தப்பக்கம் உங்களுக்கு இந்தப்பக்கம் எனக்கு " என்றார் குடும்பஸ்தன்.

**...நாட்டு நடப்பு...**

பரோபகாரியினால் அதற்கு மேல் ஒன்றுமே பேச முடியவில்லை. இதன் காரணமாக இரு சாராருக்கும் கடும் வாக்கு வாதங்களும், நாளாந்த சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டன. அவற்றைத் தொடர்ந்து பல வழக்குகளும் இடம்பெற்றன.

முழு ஊர் மக்களும் குடும்பஸ்தனையும் அவர் குடும்பத்தினரையும் சபிக்கத் தொடங்கினர். அவரின் பிள்ளைகள் பெரியவர்களாகி, அவர்களும் தீயபாதையிலே நடக்கத்தொடங்கினர். முறையற்ற திருமணங்களை செய்து ஊரார் ஏளனம் செய்யும் அளவிற்கு நடந்து கொண்டனர்.

இருப்பினும் இறைவன் எப்பொழுதும் பொறுமையை தெடர்ந்து கடைப்படிக்க மாட்டார். அவர் தனது தீர்ப்பை தீயவர்களுக்கு தாமதமாக வழங்கினாலும், அது தக்க தீர்ப்பாகவே அமையும். குடும்பஸ்தனின் விடயத்தில் இறைவன் இப்பொழுது தீர்ப்பு வழங்க ஆயத்தமாகிவிட்டார்.

குடும்பஸ்தன் ஊரில் மாத்திரமல்ல அவர் தொழில் புரியும் இடத்தில் கூட கடமையை ஒழுங்காக செய்யாததினால் தற்காலிக இடை நிறுத்தத்திற்கு ஒரு தடவை உள்ளாகினார். அதனால் ஓய்வு பெற்றும் ஓய்வூதியம் பெறுவதில் பல சிக்கல்கள் தோன்றின. இன்னும் அது இழுபறி நிலையிலே உள்ளது.

அரச காணிக்கு திருட்டுத்தனமாக மனைவியின் பெயரில் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் உடனடியாக செயல்படும் வகையில் இரத்து செய்யப்பட்டு அதை மீளக் கையளிக்கும்படி உரிய அலுவலகம் அவசர அறிவித்தலை வழங்கியது.

பல தடவைகள் அனுமதியற்ற கட்டடங்களை கட்டக்கூடாதென சம்மந்தப்பட்ட திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியும் அதைமீறி குறித்த காணியில் அனுமதியற்ற கட்டடங்களை கட்டியதால் சகல கட்டடங்களையும் அழிக்கும் படி நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியது.

தீர்ப்புக்கு முன்னே அவர் கில்லாடித்தனமான துணிச்சல் மிக்க காரியத்தை செய்திருந்தார். அதாவது அந்த காணியை இரண்டாகப் பிரித்து இன்னுமொருவருக்கு விற்று விட்டார். அது மாத்திரமல்ல குறித்த தீர்ப்பை மறுபரிசீலணை செய்ய வழக்கொன்றும் தாக்கல் செய்துள்ளார்.

காணியை பணத்திற்கு வேண்டியவர் செய்வது என்னவென்று தெரியாது கைகால் தெறிக்க அங்குமிங்கும் ஓடித்திரிகிறார். குடும்பஸ்தனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் வட்டிக்கு பணம் கொடுத்தவர்கள் விழிகள் பிதுங்கிய நிலையில் தலைகளை சொறிந்து கொண்டு பித்துப்படித்தவர்களாகி விட்டனர்.

மறுபரிசீலனை வழக்கில் தீர்ப்பு குடும்பஸ்தனுக்கு சார்பாக அமைந்தால் இலங்கையில் சகல இடங்களிலும் அனுமதியற்ற கட்டங்களை கட்டலாம், அரச ஒதுக்கீட்டு காணிகளில் அத்துமீறி குடியேறலாம் என சட்டங்கள் திருத்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதே வேளை இரத்துச் செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் மீள அவருக்கு வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

- துட்கைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றம்

அன்று ஒரு மாலை நேரம் இருள் மெல்ல மெல்ல கௌவிக் கொண்டிருந்தது. ஜெஸ்மினும் பயாசும் தனது மாலைநேர வகுப்பை முடித்து வீடு நோக்கி சென்று கொண்டிருந்தனர்.


ஜெஸ்மினும் பாயாசும் முதலாம் தரத்தில் இருந்து உயர் தரம் வரை ஒன்றாகவே கல்வி பயின்றனர். இருவரும் வகுப்பில் மிகவும் கெட்டிக்காரராக விளங்கினர்.

உயர்தரம் படிக்கும் போது இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கத்தொடங்கினர். பயாஸ் ஜெஸ்மின் பாடசாலைக்கு வராவிட்டால் துடித்துவிடுவான். சக நண்பர்களோடு பேசவும் மாட்டான். ''என்னடா பயாஸ் ஒருமாதிரி இருக்கிறாய்'' என்று கேட்டால் ''ஒன்றுமில்லையடா'' என்று மழுப்பி விடுவான். உயர்தர பரீட்சை முடிந்து விட்டது. இருவரின் பெறுபேறுகளும் வெளியாகின. பயாசுக்கு பல்கலைக்கழகம் கிடைத்தது. ஆனால் போவதற்கு அவனிடம் பணம் இல்லை மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தவன். இப்படியாக காலங்கள் உருண்டோடின. பாயாசும் வேலைதேடி அலைந்தான் வேலையோ கிடைத்த பாடில்லை. ஒரு கடையில் கூலிக்காக வேலைசெய்தான்.

ஜெஸ்மினும் பாயாசும் விரும்புவது வெகுவாக வெளியே தெரியவந்தது. ஜெஸ்மினின் வீட்டார் திருமணத்திற்காக மாப்பிள்ளை தேட ஆரம்பித்தனர். அப்போது ஜெஸ்மின் தனது எதிர்காலத்துணைவனாக தான் பயாஸை அடைய இருப்பதை வீட்டாரிடம் தெரிவித்தாள். அதே கணம் வீட்டில் பூகம்பமே வெடித்தது. பெற்றோர் மிகவும் எதிர்த்தனர். இருந்தாலும் பயாஸை இவள் நேசித்துக்கொண்டிருந்தாள். பயாஸ் பலதடவை சொல்லிப்பார்த்தான் " நீ உனது பெற்றோரின் விருப்பப் படியே வாழவேண்டும்" என்று ஆனால் அதை அவள் மறுத்து விட்டாள். பயாஸ் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினான்.

அப்போது ஒருநாள் பாயாஸைத் தேடி இவள் வந்துவிட்டாள் "என்ன ஜெஸ்மின் " "ஒன்றுமில்லை என்னால் இனி அந்த வீட்டில் இருக்க முடியாது நீ என்னை திருமணம் செய்துகொள்ள வேண்டும்'' என்று துடியாய் துடித்தாள். இவனும் செய்வதறியாமல் திகைத்தான். இருவரினதும் திருமணம் நடந்தேறியது. இப்போது இருவீட்டாரினதும் எதிர்ப்பை இருவரும் சம்பாதித்தனர். இருப்பதற்கு ஒரு வீடில்லாமல் கூலிக்காக ஒரு வீட்டில் அமர்ந்தனர். இப்படியாக தமது வாழ்க்கையை மிகவும் ஏழ்மையாக நடத்தினர். அப்போது ஜெஸ்மின் பேச ஆரம்பித்தாள். ''இப்படி எத்தனை நாளைக்குத்தான் இந்தக் கூலிவீட்டில் வாழ்வது, நீங்கள் வெளிநாடு செல்ல நான் ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன்'' என்றாள். அதற்கும் அவன் சம்மதித்தான். பயாஸ் வெளிநாடு செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்தேறின. இருவரும் உயிருக்கு உயிராக வாழ்ந்தனர். தனக்கு ஒரு மகனும் கிடைத்து விட்டது. மகனையும் ஜெஸ்மினையும் விட்டு பிரியப்போகிறேன் என்று தினமும் தவியாய் தவிப்பான்.

அவ்வேளையில் வெளிநாட்டுப் பயணம் சரிவந்து விட்டது. இருவரும் பிரிவை நினைத்து அழுதனர் பயாஸ் ஜெஸ்மினைத் தேற்றினான். ''என்ன



செய்வது இறைவனின் நாட்டம் இருவரும் பிரியவேண்டும் என்று " அன்று இரவு முழுக்க தூக்கமே இல்லை விடிந்து விட்டது. பயாஸ் காலை 8 மணிக்கு புறப்பட்டான். ஜெஸ்மின் பயாஸை வழியனுப்பினாள். ஜெஸ்மின் தானும் மகனும் தனிமையில் இருப்பதை நினைத்து கட்டிலில் புரண்டு புரண்டு அழுதாள்.

பயாசும் பிரயாணத்தில் மகனையும் ஜெஸ்மினையும் நினைத்து துடியாய் துடித்தான். பாலர் வகுப்பில் இருந்து ஒன்றாகப்படித்தது முதல் திருமணம் முடித்தது வரை தனது மனக்கண் முன் நிழலாடியது.

தனது பயணம் முடிந்ததும் தனது காலை றியாத்தில் தடம் பதித்தான். இப்போது தொலைபேசியில் பேசுகிறான். போய் சேர்ந்துவிட்டதாக ஜெஸ்மின் அழுதாள். ''அழவேண்டாம் நான் தூரத்தில் இருந்தாலும் எனது உள்ளத்தில் நீ இருக்கிறாய்.'' என்றான். அவ்வாறே நாட்கள் வாரங்களாகின வாரங்கள் மாதங்களாகின மாதங்கள் வருடங்களாகின. தனது ஜெஸ்மினுக்காக நிறைய பொருட்களையும், பணங்களையும் அனுப்புவான் பயாஸ். இவளுக்கு எந்தக்குறையும் வைக்காமல் தனக்காக ஒரு பெரிய வீட்டையும் கட்டினான். வீடு நிறைய தளபாடங்கள் ஜெஸ்மினை ஒரு மகாராணிபோல் வைத்தான்.

இப்போது அடிக்கடி தொலைபேசியில் செல்லமாகவும் குறும்பாகவும் பேசுவான் ஜெஸ்மின் நான் வரும் வரை எனக்காக காத்திருப்பாய்தானே என்று கேட்பான். எனது ஒவ்வொரு மூச்சிலும் உன்பெயரையே சொல்கிறேன் என்று உரையாடுவான்.

ஜெஸ்மின் தற்போதெல்லாம் பயாஸைப் பெரிது படுத்துவதில்லை. ஊரில் பிறரும் மதிக்கின்ற அளவிற்கு வசதியுடன் வாழ்ந்து வந்தாள். அடிக்கடி பணமும் பொருட்களும் அனுப்பி விடுவான்.

இப்படியாக இருக்கும் போது ஜெஸ்மின் தன் உடல் வேட்கையை தீர்பதற்காக ஒருவருடன் பழகத் தொடங்கினாள். இவள் அவனுடன் உடல் வேட்கையை தீர்த்துக்கொண்டாள். பயாஸ் அனுப்பும் பணத்தை எல்லாம் அவளின் ஆசை நாயகனுக்கு கொடுத்து விடுவாள் இவனும் அதை வசமாக்கிக் கொண்டான்.

இவளின் விடயம் ஊரில் பரவலாகத் தெரியவந்தது. பயாசும் வெளிநாட்டில் இருந்து வருவதாக அறிவித்தன். ஜெஸ்மினுக்கு பெரும் தலையிடியாக இருந்தது. பயாசும் தனது மனைவி ஜெஸ்மினுக்காகவும், மகனுக்காகவும் நிறைய பொருட்கள் வாங்கிச் சேர்த்தான். அவனின் ஒவ்வொரு மூச்சும் ஜெஸ்மின், ஜெஸ்மின் என்றே சுவாசித்தான் கடும் ஆவலுடன் ஊர் வந்து சேர்ந்தான்.

ஜெஸ்மின் பயாஸ் மீது அன்பு குறைந்தவளாக காணப்பட்டாள். பயாஸ் மிகவும் அன்பு காட்டினான். ஜெஸ்மினும் தன்னை வெறுத்தவளாகக் காணப் பட்டாள். ஆனாலும் அவன் அதனைப் பொருட்படுத்தவில்லை. பயாஸ் தனது வீட்டை பார்த்து பிரமித்து போனான் நமக்கு அல்லாஹ் இப்படியான வீட்டை தந்திருக்கிறானே! அவனுக்குத்தான் நன்றிசெலுத்த வேண்டும் என்று மனதால் பூரிப்படைந்தான். தனது மகனுடன் மிகுந்த அன்புடனும், பாசத்துடனும் நடந்து கொண்டான். அவன் ஆண்டு 2 இல் படித்துக் கொண்டிருந்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.

மகனைக்கூட்டிக் கொண்டு வெளியே சென்று அவனுக்கு விருப்பமான தின்பண்டங்களையும் ஜெஸ்மினுக்கு விருப்பமான தின்பண்டங்களையும் வாங்கிக் கொண்டு வீடு வந்தான். வீட்டினுள் நுழைந்ததும் அவன் கண்ட அந்த கோரநிகழ்வு அவனை நிலைகுலைய வைத்தது. இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. ஜெஸ்மின் என்று அழுதான். அங்கே ஜெஸ்மினின் உடல் இன்னொருவனால் அரவணைக்கப்பட்டதைக் கண்டு உயிரற்ற சடலமாய் சரிந்தான்.

அதன்பின் ஜெஸ்மினுடன் எதுவுமே பேசமுடியாமல் பிரமித்து விட்டான். பயாஸ் அவள்மீது வைத்திருந்த அன்பு தவிடுபொடியானது. இவன் இவளுக்கு உழைத்த உழைப்பு இவளுக்காக தனிமையில் வாடியது எல்லாமே அநியாயமாகிவிட்டதை எண்ணி எண்ணி அழுதான்.

அதன்பின் தனது மகனையும் எடுத்துக்கொண்டு வெளியேறினான் பயாஸ் வீதியில் நடைப்பிணமாக நடை பயின்றான். இப்போது தனது சகோதரியின் வீட்டில் தஞ்சம் புகுந்தான் தனது மகனுக்காக ஏக்கப் பெருமூச்சை விட்டான். தனது மகனுக்காக தான் யாரையும் திருமணம் செய்யாமல் தனிமையில் வாடினான்.

(யாவும் கற்பனையே.)

# கடலுக்குள் பாசத்தை தேடிய குழந்தை

ஒரு நாள் வழமை போல் மாலை வேளையில் தனியார் கிளினிக்கில் நோயாளிகளை பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு தாய் 4 வயது குழந்தையோடு வந்திருந்தாள்." தொடர்ந்து 2 மாதங்களாக காய்சல் இருக்கிறது பல இடங்களில் மருந்து எடுத்தும் குணமடையவில்லை" என்றாள். காய்ச்சலோடு சம்மந்தப்பட்ட சில கேள்விகளைக் கேட்டுவிட்டு முழு உடலையும் பரிசோதித்து பார்த்தேன். எந்த விதமான நோய்க்குரிய அறிகுறிகளையும் காணவில்லை. " பிள்ளையில் நோய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே" என்றேன்.

அது தான் டொக்ரர் ஊரிலும் எல்லா டொக்ரர்மாரும் இந்த பிள்ளைக்கு நோய் எதுவும் இல்லை என்று செல்லிவிட்டார்கள். அப்படியிருந்தாலும் தினமும் குறிப்பாக இரவில் இவளுக்கு கடுமையான காய்ச்சல் வருகிறதே! என்ன செய்வது? உடலில் ஏற்படும் நோயின் அறிகுறிகளாக காய்ச்சல் சாதாரணமாக வருவது வழக்கம். அது போலவே உள்ளத்தில் ஏற்படும் நோய்களுக்கும் காய்ச்சல் ஒரு அறிகுறியாக ஏற்படக் கூடும். உள்ளத்தை பாதிக்கும் ஏதாவது நிகழ்வுகள் சிறுமிக்கு ஏற்பட்டுள்ளதா? என விசாரித்தேன்.

"அப்படி எதுவும் இல்லை டொக்ரர்" அவள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுக்கிறேன். அன்பு ஆதரவோடு நடந்து கொள்கிறேன் எனது குடும்பத்தவர்களும் கூட எனது மகளுடன் அபார அன்பு. சிறுமியின் உள்ளம் பாதிக்குமளவு நாங்கள் எதுவும் செய்யவில்லை " என்றார்.


" பிள்ளையின் வாப்பா என்ன செய்கிறார்? கச்சேரியில் இலிகிதராக இருந்தார். 4 மாதங்களுக்கு முன் சம்பளமற்ற லீவைப் போட்டுக் கொண்டு சவூதிக்கு சென்றார். அவருக்கு ஒரு சகோதரி அதற்கு வீடு காணி எதுவும் இல்லை. திருமண வயதை அடைந்து விட்டதால் காணிவாங்கி வீடு கட்டுவதற்காக சவூதிக்கு உழைக்கச் சென்றிருக்கிறார்.

தாய் நான் குழந்தைக்கு எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறேன். எனவே குழந்தை சந்தோசமாக இருக்கிறது

இதனை சுகமாக்குவதற்கும் சில மாத்திரைகள் இருக்கின்றன.

இந்த சிறுமி மாதக் கணக்கில் காய்ச்சலால் வாடியிருக்கிறாள். சிறுமி வாழும் சமூக அமைப்பில் இருக்கும் சீதனம் என்ற நோய் இந்த பாலகியை மறைமுகமாக எவ்வாறு பாதித்திருக்கிறது என்பதைப் பாருங்கள்.

உடலில் தொடர்ந்தேர்ச்சையான காய்ச்சலை ஏற்படுத்தி இருக்கிறது. இதனை "சைகோ சொமாடிக் டிஸ்ஓடர்" என்று சொல்வார்கள். இதனால் தான்



என நினைக்கிறாள். தாயின் அன்பை அவளால் கொடுக்க முடியும். தந்தையின் நெஞ்சில் ஏறி அமர்ந்து கொண்டு விளையாட வழியில்லாமல் ஏங்கும் அந்தச் சிறுமியின் ஏக்கத்தை நிவர்த்திக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. தந்தையின் கலப்பில்லாத தனித்துவமான அன்பிற்காக அந்த சின்னஞ்சிறு உள்ளம் அமைதி பெற முடியாமல் தடுமாறுகிறது. தந்தை அருகில் இல்லை அவரின் அன்பு கிடைக்க வில்லை என்ற ஏக்கம். அதன் உளத்தைப் பாதித்தது.

அந்த மாத்திரைகள் சிலவற்றைக் கொடுத்தேன். காய்ச்சலும் சுகமானது. இருந்த போதிலும் தொடர்ந்தும் ஏதாவது ஒன்றை இழந்தவள் போலதான் அந்தச் சிறுமியின் வாழ்க்கை இருந்தது. அவள் அடிக்கடி தாயிடம் வாப்பா எங்கே? என்று கேட்டிருக்கிறாள். அவர் சவூதியில் இருக்கிறார் என்று சொன்னால், சவூதி எங்கே இருக்கிறது? என்று கேட்டிருக்கிறாள். வாப்பாவை பற்றி இவ்வாறு அடிக்கடி அந்த சிறுமி கேட்பதும், தாய் அதற்கு வாப்பாவை பார்க்க கடல் கடந்து செல்ல வேண்டும். என்று சொல்வதும் வழக்கமாகி இருக்கிறது.

ஒரு நாள் மாலைபொழுதில் நிலவின் வெளிச்சத்தில் சிறுமியின் குடும்பத்தவர்கள் ஒன்று சேர்ந்து ஓய்வுக்காக கடற்கரைக்கு சென்றிருக்கிறார்கள். கடற்கரை மணலில் சிலர் அமர்ந்து பேசிக்கொண்டிருக்க மற்றை சிறுவர்களுடன் சேர்ந்து இந்த சிறுமியும் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென அவளைக் காணவில்லை தேடி ஓடுகின்றனர் குடும்பத்தினர். மற்றைய சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்க அந்தச் சிறுமி [illegible] இருந்து கடலுக்குள் [illegible] சென்றாள். சில நிமிடங்கள் தாமதித்து அந்த சிறுமியை தேடியிருப்பின் அவள் கிடைத்திருக்க மாட்டாள். அலை அவளை எங்கோ கொண்டு போய்ச் சேர்த்திருக்கும் எப்படியோ குடும்பத்தவர்கள் சேர்ந்து சிறுமியை காப்பாற்றிவிட்டனர். "எல்லாப் பிள்ளைகளும் கரையில் விளையாட நீ மட்டும் ஏன் கடலுக்குள் சென்றாய்? கடலுக்கு அங்கால சவூதியில வாப்பா இருப்பதாக உம்மா சொன்னா அதுதான் வாப்பாவைப் பார்க்கப் போனேன்" என்றாள் அந்த பச்சிளம் பாலகி.

அந்தச் சின்னஞ் சிறு உள்ளம் எந்தளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். கடலுக்குள் பாசத்தைத் தேடிய இந்தக் குழந்தை போல் எத்தனை குழந்தைகள் எப்படி எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். என்பது பலருக்குத் தெரியாது. இவை எதுவும் கற்பனைக் கதைகள் அல்ல. எனது கண்கள் நேரடியாக சந்தித்த நிஜங்கள். திருமணம் செய்யக் காத்திருக்கும் ஆண்களே! சீதனம் ஓர் அற்ப சுகம். நிரந்தரமாக தங்குமிடம் சொத்தல்ல. ஆண்மையிழந்து சீதனத்திற்கு அடிமைப்படாமல் தலைநிமிர்ந்து வாழ்ந்து இந்த சமூகத்தை சீதனச் சீழிலில் இருந்து விடுவிக்க முன் வாருங்கள்.

எவ்வளவு தான் சீதனம் என்ற தலைப்பில் பேசப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்த ஏன் மறுக்கிறீர்கள்? இளைஞர்களே! வழமையாக பெற்றோர் குடும்பத்தவர்கள் பேச்சைக் கேட்காதவர்கள் கூட சீதனம் என்று வந்து விட்டால் அவர்களின் பேச்சை கேட்கின்றார்கள். எனவே சீதனம் கேட்கும் இளைஞர்களே! நாளை மறுமையில் நீங்கள் தான் இறைவன் முன் குற்றவாளி என்பதை மறந்து விடாதீர்கள்.

சாபிர் சனூஜா
ஆனைச்சேனை
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியத்துவம்

தமக்கு
பட்டப் பெயர்வைத்தாலும்
தம் மாணவர்
பட்டம் வாங்கிச் செல்ல
வேண்டுமென நினைப்பவர்
ஆசிரியர்

அடித்தது மணி
முடிந்தது பணி
என அடங்குபவர்
ஆசிரியர் அல்ல

ஆசிரியல் ஓர் ஏணி
மாணவர் உயரச் செல்ல
உதவிடும் ஏணி

ஆசிரியர் ஓர் தோணி
மாணவரை அக்கரைக்கு
அழைத்துச் செல்லும் தோணி

பணிகளில்
ஆசிரியர் பணி
ஒரு தனிப் பணி

கற்றவர் எல்லாம்
அமைச்சராய்
அதிகாரியாய்
ஆட்சியாளராய்
கரை சேர்ந்து விடுவார்கள்

ஆனால்
ஆசிரியரோ
ஆசிரியராகவே
உழைத்துக் களைத்து
ஓய்ந்து போகிறார்.



S.சஜித்காந்
9E
தி/இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா
இந்துக் கல்லூரி

# கவிமுரசு

## குளிர்காலம்

உன் இடக்கையைப்
பிடித்தது
வலியின் அழுத்தத்தினால் தான்

அதுவே....

வாஞ்சையாகி.....
இதமாகிய போது

மனம் அதிர்ந்தது!

உன் பார்வையின் ஈரம்
வலியை இதமாக்கிய போது
உன் நெஞ்சின் ஓரம்
தலை சாய்ந்தது...

உலர்ந்து போன உதடுகள்
ஈரமாகின....

ஜெ.மதிவதனி

**உங்களின் கவிதைகள், கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் ஆக்கங்கள் உங்களின் படங்களுடன் மலைமுரசில் இடம்பெற வேண்டுமா?**

எமக்கு அனுப்பி வையுங்கள்

cjtp Mrpupah;> ,yf;fpag;
gpupT> kiyKuR> ,y 159A>
fly; Kf tPjp> jpUNfhzkiy

malaimurasu@hotmail.com

## வரலாற்றில் தம்பலகாமம் – பாகம் 4 –

முதலாம் விஜயபாகு (கி.பி 1055 - 1110 )மன்னன் தம்பலகாமத்தில் இருந்து செயற்பட்ட காலத்தில் பர்மா ,தென்னிந்தியா என்பவற்றுடன் தொடர்பினை ஏற்படுத்தி இருந்தான் என்று முன்னைய கட்டுரையில் பார்த்திருந்தோம்.

இதன்போது ஏற்பட்ட சமய , வணிகத்தொடர்பே பின்னாட்களில் பர்மாவில் இருந்து பௌத்த குருமாரை இலங்கைக்கு அழைத்து அதுவரை நிறுத்தப்பட்டிருந்த உபசம்பத என்னும் சடங்கினை மீண்டும் ஆரம்பிக்க ஏதுவாய் இருந்தது எனலாம்.(1) பெரும்பாலும் சோழர்களுடைய நிர்வாக, அரசியல் அடிப்படைகளை ஒத்திருந்த இவனுடைய ஆட்சியில் சிறந்த படைத்தலைவனாக மகுருகுலத்தரையண்டு என்னும் தமிழ்வீரன் இருந்தது பற்றியும், தமிழ் எழுதுவினைஞர்கள் சேவையாற்றியது பற்றியும் பனாகடுவ செப்பேடு உறுதிப்படுத்துகிறது.

இவனுடைய காலத்தில் கந்தளாய் விஜயராசச் சதுர்வேதி மங்கலம் என்றும் அங்குள்ள சிவன் கோவில் விஜயராஜ ஈஸ்வரம் என்றும் அழைக்கபட்டது. கி.பி 1097 இல் நங்கைசானி என்னும் பிராமணப்பெண் தனது கணவனின் நினைவாக சதுர்வேத மங்கலத்து விஜயராஜ ஈஸ்வரம் என்னும் ஆலயத்தில் ஏற்படுத்திய அறக்கட்டளை பற்றிய விவரங்களை வர்ணிக்கிற சாசனம் முதலாம் விஜயபாகுவின் 42 ம் ஆட்சியாண்டிலே எழுதப்பட்டதாகும்.(2)

இதனைத்தொடர்ந்து ஆட்சிக்கு வந்த கஜபாகு (கி.பி 1132 - 1153)மன்னன் கோகர்ணத்தில் இருந்த சிவாலயத்திற்கு (திருக்கோணேச்சரம் ) தொண்டுகளைச் செய்தான் என கோணேசர் கல்வெட்டும், தக்ஷிண கைலாசபுராணமும் சொல்கிறது. அத்தோடு கந்தளாயில் உள்ள சாசனங்கள் அவன் விஜயராஜ ஈஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்புகளை உணர்த்துகிறது.

மேற்கூறிய காலப்பகுதிகளில் தம்பலகாமம்,கந்தளாய்,திருகோணமலை என்பன சிங்கள ஆட்சியாளர்களின் மேலாண்மையை ஏற்றிருந்த போதும் அங்குவாழ்ந்த மக்களின் மொழி,சமய,பண்பாட்டு வழக்கங்களில் இடையூறுகளைக் கொண்டிருக்கவில்லை என்றே கருதவேண்டி இருக்கிறது.

இதனைத் தொடர்ந்து தம்பலகாமம் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் சாசனம் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய ஆவணமாக கருதப்படும் தம்பலகாமம் கல்வெட்டு ஆகும். கலிங்க மாகன் 13 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில்(1215), அக்காலத்தில் இலங்கையின் தலைநகரமாக விளங்கிய பொலநறுவையைக் கைப்பற்றி 40 ஆண்டுகள்வரை ஆண்டான் என்பது வரலாறு. எனினும் இச்சாசனத்தில் அரசனின் பெயர் அடையாளங் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாமாகப் பதினொரு வரிகளைக்கொண்ட துண்டமாகிவிட்ட இச்சாசனத்தில் 5ஆவது வரி முதலான சாசனப்பகுதி கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளதாகப் பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

5. உடையார் நிச்ச

6. யித்த ஜகதப்ப

7. கண்டன் தாநத்(து)

8. க்கு நிலையாக்(கித்)

9. தம்பலகாம ஊ

10. ரை நான் கெல்

11.லைக்கு தள எல்லை.

இச்சாசனம் தம்பலகாமம் என்னும் ஊரின் பெயரினைக் குறிப்பிடும் முதலாவது தமிழ் ஆவணம் என்னும் சிறப்பினைப் பெறுகிறது. அத்தோடு இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் உடையார் என்ற சொல் சாசன வழக்கில் அரசர்களை அல்லது அரச பிரதானிகளைக் குறிக்கும் அதேவேளை "ஜகதப்ப கண்டன் தானம்" என்பது "ஜகதப்ப கண்டன்" என்ற பெயரால் வழங்கிய படையொன்று இங்கு இருந்துள்ளது என்பதனையும் இந்தச் சாசனத்தின் மூலம் உறுதிப்படுத்த முடிகிறது.

எனவே தம்பலகாமம் என்னும் பெயர் புராதனமானது. அது ஏறக்குறைய 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சாசன வழக்கில் இருந்ததை மேற்கூறிய தம்பலகாமம் கல்வெட்டு மூலம் அறிந்து



உதயனை யானை போட்ட கல் நெருக்கம்

கொள்ளக்கூடியதாக உள்ளது.

கந்தளாய், கொட்டியாரம், கட்டுக்குளப்பற்று, பதவியா, மன்னார் மாதோட்டம் , புலச்சேரி, தேவபட்டினம் முதலிய இடங்களில் கலிங்கத்து மாகோன் தனது படை நிலைகளை அமைத்திருந்தான் எனப் பாளி, சிங்கள வரலாற்று நூல்கள் சொல்கின்றன.

தம்பலகாமம் அக்காலப் பகுதியில் ஆட்சியாளரின் ஏற்பாட்டின் பிரகாரம் ஒரு வீரபட்டினமாக வீரகணமொன்றின் காவலிலுள்ள வணிக நகராக இருந்ததா? என்ற சந்தேகங்களை வரலாற்றுப் பேராசிரியராகிய திரு.சி.பத்மநாதன் அவர்கள் தனது "தம்பலகாமத்துக் கல்வெட்டு" ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயிலுக்குப் பின்புறமாக "தம்பன் கோட்டை" என இன்றும் அழைக்கப்பட்டு வரும் இடம் பழமையில் சிறிய கோட்டையாக இருந்ததாகவும் இக் கோட்டையைச் , சுற்றி அகழிகள் இருந்ததாகவும் காலப்போக்கில் இவையெல்லாம் சிதைந்து அழிவுற்று விட்டன என்றும் தம்பலகாமத்தைச் சேர்ந்த வயதில் முதிந்தோர் கூறுகின்றனர்.(3)

"தம்பன்" என்ற கலிங்கப்படைத் தளபதி இக்கோட்டையின் தளபதியாக இருந்ததாகவும் இவன் கிழக்கிலங்கையில் மாகனுக்கெதிராகச் செயல்பட்டோரை "தம்பன் கடவை" வரையில் கலைத்துச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது. தம்பன் கடவை என்பது பொலனறுவை ஊடாக மட்டக்களப்புக்குச் செல்லும் பாதையில் "மன்னம்பிட்டிக்கு" அருகாமையில் அமைந்துள்ள பகுதியாகும்.

இக்காலப்பகுதியில் குதிரைப்படைக்குத் தலைமைதாங்கிச் சென்ற இரத்தினாவதி தேவியின் மகனான உதயகுமாரனும் படைகளும் கந்தளாயில் இருந்து தம்பன் கோட்டைக்குத் திரும்பி வரும் போது உதயகுமாரனை கல்நெருக்கம் என்ற இடத்திலேயே யானை தாக்கியது. உதயனை யானை போட்ட கல்நெருக்கம் என்ற இடம் தம்பலகாமத்துக்கும் கந்தளாய்க்கும் இடையே உள்ள வயல்பகுதியில் இருக்கிறது.

இந்த வரலாற்றாதாரம்தான் தம்பலகாமம்.க.வேலாயுதம் அவர்களின் ரங்கநாயகியின் காதலன் என்னும் குறுநாவலின் அடிப்படை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**–வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்–**

ஆதாரங்கள்

1. இலங்கை வரலாறு
   பேராசிரியர்.சே.கிருஸ்ணராசா
   2005

2. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் -
   பேராசிரியர்.சி.பத்மநாதன்.2006.

3. தம்பலகாமத்துக் கல்வெட்டுப்
   பற்றிய புதிய சிந்தனைகள் -
   திரு. வே. தங்கராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நடிகர் அஜீத்துடன் 'டேட்டிங்' போக ஆசை: டாப்சி

தொழிலுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை குடும்பத்துக்கும் தரணும், அது மாதிரி ஆண்களைதான் எனக்கு பிடிக்கும். சிலர் தொழிலை நேசிப்பாங்க, குடும்பத்தை கண்டுக்கிறது இல்லை. சினிமாவுக்கும் என் நிஜ வாழ்வுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கும்.



கதாநாயகி நல்ல முடிவு எடுப்பது போல் கதையில் வச்சிருப்பாங்க. நிஜத்தில் நான் அப்படி இல்லை. நிறைய தப்பு செய்து இருக்கேன். தவறான முடிவுகளை எடுத்து இருக்கேன். எனக்கு கணவராக வருபவருக்கு குறிப்பிட்ட தகுதிகள் வேண்டும். அவர் பார்க்க அழகா இருந்தால் மட்டும் பத்தாது. சிறந்த மனிதனாகவும் இருக்கணும். பேசுற விதம் பிடிக்கனும். யாரையும் புண்படுத்தக் கூடாது. மனிதாபிமானம் உள்ளவரா இருக்கனும் தெளிவான முடிவுகளை எடுக்கனும். ஒரு முடிவு எடுத்த பிறகு அதை மாற்றுபவராக இருக்க கூடாது.

எல்லா பெண்களுமே இதுமாதிரி குணம் உள்ள ஆண்கள் உடன்தான் வாழ்க்கையை பகிர்ந்துப்பார்கள். நடிகர் அஜீத்திடம் எனக்கு ரொம்ப இஷ்டம். சொந்த குடும்பத்துக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர்கிட்ட பேசணும், அவரோட சாப்பிடணும் என்று எனக்கு தோணுது. இதுதான் 'டேட்டிங்' என்றால் அதை அவருடன் செய்ய தயாரக இருக்கிறேன்.

இவ்வாறு ஐதராபாத்தில் அளித்த பேட்டியில் டாப்சி கூறினார்.

# சினிமுரசு

## எட்டு விருதுகளுக்காக -பரதேசி-




தமிழ் சினிமாவில் 'சேது' துவங்கி 'பரதேசி' வரை ஆறுபடங்களை இயக்கியுள்ள பாலா, 'நான் கடவுள்' படத்துக்காக சிறந்த இயக்குனருக்கான தேசிய விருதையும், மற்ற படங்களுக்காக நான்கு தேசிய விருதுகளையும், ஆறு சர்வதேச தமிழ்த் திரைப்பட விருதுகளையும், பல மாநில விருதுகளையும் பெற்றுள்ளார்.

பி.எச். டேனியல் எழுதிய 'ரெட் டீ' என்ற ஆங்கில நாவலை மொழிபெயர்த்து தமிழில் வெளிவந்த 'எரியும் பனிக்காடு' என்ற நாவலை அடிப்படையாக கொண்டு 'பரதேசி' படத்தை பாலா உருவாக்கினார். கடந்த மார்ச் மாதம் உலகெங்கிலும் வெளியான பரதேசியின் சிறப்பைப் பார்த்து பிரமித்த இந்திப்பட இயக்குனர் அனுராக் காஷ்யப் வடஇந்தியா முழுவதுமாக 'பரதேசி'யை வெளியிட்டார்.

இந்நிலையில் 'பரதேசி' படம் வருகிற அக்டோபர் மாதம் லண்டனில் நடக்கும் சர்வதேச திரைப்பட விழாவில் அதிகபட்சமாக எட்டு விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்திய சினிமா நூற்றாண்டு விழா கொண்டாடும் இதே வேளையில் இதுவரையிலான தமிழ் சினிமாவின் வரலாற்றில் எட்டு சர்வதேச விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட ஒரே படம் 'பரதேசி' என்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த இயக்குனர், சிறந்த படம், சிறந்த வெளிநாட்டு படம், சிறந்த வெளிநாட்டு இயக்குனர் ஆகிய நான்கு விருதுகளுக்காக இயக்குனர் பாலாவும், சிறந்த நடிகருக்காக அதர்வா, ஒளிப்பதிவாளருக்காக செழியன், இசையமைப்பாளருக்காக ஜீ.வி.பிரகாஷ் குமார், உடை வடிவமைப்புக்காக பூர்ணிமா ராமசாமி என மொத்தம் எட்டு விருதுகளுக்காக பரதேசி படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இத்திரைப்பட விழாவில் அமெரிக்கா, ரஷ்யா, லெபனான், தென்கொரியா, சிலி, ஐரோப்பிய நாடுகளின் உலகப்படங்கள் போட்டியில் கலந்து கொண்டாலும் அதிகபட்சமான விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரே படம் 'பரதேசி'தான். முதன்முறையாக சர்வதேச தொழில்நுட்ப கலைஞர்களுக்கு இணையாக தமிழ் திரைப்படக் கலைஞர்கள் உலக அளவில் போட்டியில் கலந்து கொள்ளும் இத்திரைப்பட விருதுகள் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் அறிவிக்கப்பட உள்ளன.

## ஜீவாவுடன் ஜோடி சேரும் நஸ்ரியா

நடிகர் ஜீவாவுடன் ஜோடி சேரவுள்ளார் நேரம் பட நாயகி நஸ்ரியா நஸிம்.

என்றென்றும் புன்னகை, யான் ஆகியப் படங்களில் பிசியாக நடித்து வருகிறார் நடிகர் ஜீவா. தற்போது தனது அடுத்த படத்திற்கான வேலையையும் விரைவில் தொடங்கவுள்ளார்.

மேலும், இப்படத்திற்கு தற்போது பரவிக் கிடக்கும் கொமடி ட்ரெண்டுக்காண ரசிகர்களை கவரும் விதத்தில் 'நீ நல்லா வருவடா' என்று டைட்டில் வைத்துள்ளனர். இப்படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நேரம் புகழ் நஸ்ரியா நடிக்கிறார்.

ஜீவாவும் இதனை உறுதிப்படுத்தும் வகையில், வருகிற அக்டோபர் முதல் வாரத்தில் இதற்கான பணிகள் தொடங்கிவிடும் எனவும், எஸ்.எம்.எஸ் படத்தை போல இப்படம் ரசிகர்களுக்கு கொமடி விருந்தாக அமையுமென்றும் தெரிவித்துள்ளார். தெலுங்கு இயக்குனர் கருணாகரன் என்பவரிடம் உதவி இயக்குனராக பணியாற்றிய சந்திரமோகன் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். இப்படம் ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் தயாராகவுள்ளது.

மேலும் யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைக்கவுள்ளார். சூப்பர் குட் பிலிம்ஸ் இப்படத்தினை தயாரிக்கவுள்ளது.



## அனுஷ்காவுடன் சார்மி மோதல்

அனுஷ்கா – சார்மி இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக தெலுங்கு பட உலகம் கிசுகிசுக்கிறது. வரலாற்று படங்களில் அனுஷ்காவுக்கு போகும் கேரக்டர்களை பறிக்க சார்மி மல்லுக்கட்டுகிறார். ஏற்கனவே அனுஷ்கா 'அருந்ததி' என்ற படத்தில் நடித்து வரலாற்று படங்கள் கேரக்டருக்கு பொருத்தமானவர் என பெயரெடுத்தார்.

தொடர்ந்து அவருக்கு அதே மாதிரியான படம் வாய்ப்புகள் வந்தன. தற்போது 'ருத்ரமாதேவி' என்ற வரலாற்று படத்தில் நடித்து வருகிறார். இதற்கிடையில் தனக்கும் வரலாற்று படங்கள் பொருத்தமாக இருக்கும் என்று தயாரிப்பாளர்களிடம் வாய்ப்பு கேட்க தொடங்கியுள்ளார் சார்மி. இதற்கு வசதியாக ஏற்கனவே வரலாற்று கேரக்டரில் தான் நடித்த பட ஸ்டில்களை பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளார். இது அனுஷ்காவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இருவருக்கும் பனிப்போர் நடக்கிறது.

## சென்னையில் செப்டம்பர் 9-ந் திகதி நடிகர் பரத் காதல் திருமணம்



சங்கர் டைரக்ட் செய்த 'பாய்ஸ்' படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகம் ஆனவர் பரத். பாலாஜி சக்திவேல் டைரக்ட் செய்த 'காதல்' என்ற படத்தின் மூலம் பிரபலமானார். இதுவரை அவர் 24 படங்களில் நடித்திருக்கிறார். சமீபத்தில் திரைக்கு வந்த 'ஐந்து ஐந்து ஐந்து' இவருடைய 24-வது படமாகும். பரத்தும், துபாயில் பல் டாக்டராக இருக்கும் ஜெஸ்லி என்பவருக்கும் இடையே கடந்த ஒரு வருடமாக காதல் இருந்து வந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்பினார்கள்.

இவர்கள் காதலை இரண்டு பேர்களின் பெற்றோரும் ஏற்றுக் கொண்டார்கள். அதைத் தொடர்ந்து பரத்-ஜெஸ்லி இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது. இவர்கள் திருமணம் அடுத்த மாதம் (செப்டம்பர்) 9-ந்திகதி சென்னையில் நடக்கிறது. செப்டம்பர் 14-ந்திகதி திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னையில் நடைபெறுகிறது.

காதல் திருமணம் செய்து கொள்வது பற்றி நடிகர் பரத் நிருபரிடம் கூறியதாவது:-"ஜெஸ்லியை சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் போது, தற்செயலாக சந்தித்தேன். 2 பேரும் நட்புடன் பழக ஆரம்பித்தோம். பின்னர் அதுவே காதலாக மாறியது. 2 பேரும் காதலை பகிர்ந்து கொண்டோம். திருமணம் செய்து கொள்ள முடிவு எடுத்தோம்.

எங்கள் திருமணத்திற்கு 2 குடும்பங்களை சேர்ந்தவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். பெற்றோர்கள் சம்மதத்துடன் நானும், ஜெஸ்லியும் திருமணம் செய்து கொள்கிறோம்.ஜெஸ்லி பி.டி.எஸ். படித்தவர்.துபாயில் பல் மருத்துவராக பணிபுரிந்து வந்தார். திருமணத்துக்கு பின் எம்.டி.எஸ். படிக்க முடிவு செய்திருக்கிறார்."

## மறதி நோயால் பாதிக்கப்பட்ட 100 வயது ரசிகைக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய அமிதாப் பச்சன்



பெர்னடைன் டிசோசா என்ற பெண் தனது சிறுவயது முதலே அமிதாப்பின் பரம ரசிகையாக இருந்து வருகிறார். தற்போது வரும் 18-ஆம் தேதியில் 100 வயதை எட்டும் இவர், முதுமை காரணமாக வரும் அல்சைமர் என்னும் மறதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

குடும்ப உறுப்பினர்களை எல்லாம் மறந்துவிட்ட நிலையிலும் அவருக்கு அமிதாப்பின் பெயர் மட்டும் நினைவில் இருக்கின்றது. அவருக்கு சாப்பாடு கொடுக்கக்கூட அமிதாப் அவரை வந்து பார்க்கப் போகின்றார் என்று சொல்லியே உணவு ஊட்டுவதாக அவரது குடும்பத்தினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அவரை சந்தோஷப்படுத்த விரும்பிய அவரது குடும்பத்தினர், டிசோசா பற்றி அமிதாப்பிற்கு ஒரு தகவல் அனுப்பியிருந்தனர். அவருக்கு 100 வயதாவதை ஒட்டி அமிதாப் தனது ரசிகைக்கு ஒரு பிறந்தநாள் வாழ்த்து அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இத்தனை தள்ளாத வயதிலும், முதுமை மறதி நோயினால் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் தன்னுடைய பெயரை மட்டும் அவர் ஞாபகம் வைத்திருப்பதை அறிந்த அமிதாப் மிகவும் மனம் நெகிழ்ந்து போனார். உடனடியாக தன்னுடைய ரசிகைக்கு வீடியோ மூலம் வாழ்த்துச் செய்தியையும் அனுப்பியுள்ளார்.

## 'மெட்ராஸ் கபே' திரைப்படம் நிச்சயம் வெளியிடப்படும்: ஜான் ஆபிரகாம்



விடுதலைப்புலிகளை தீவிரவாதிகளாக சித்தரிக்கும் 'மெட்ராஸ் கபே' திரைப்படத்தை வெளியிடக்கூடாது என்று தமிழ் அமைப்புகள் தடை கோரியுள்ளன. இந்நிலையில் அப்படத்தின் கதாநாயகனும் திரைப்பட தயாரிப்பாளருமான ஜான் ஆபிரகாம், சென்சார் போர்டு 'மெட்ராஸ் கபே' திரைப்படத்தை வெளியிட அனுமதித்து நற்சான்று வழங்கியுள்ளது.

எனவே அப்படத்தை நான் நிச்சயம் திரையில் வெளியிடுவேன் என்று கூறியுள்ளார்.

இப்படத்தில், ராஜீவ் காந்தியை கதாநாயகனாகவும், பிரபாகரனை வில்லனாகவும் சித்தரித்து காட்டப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டி நாம் தமிழர் கட்சியின் நிறுவனர் சீமான், ம.தி.மு.க. தலைவர் வைகோ உள்ளிட்டோர் அப்படத்திற்கு தடை கோரியுள்ளனர்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும், சிங்கள ராணுவத்துக்கும் சண்டை தீவிரமாகிறது. அங்கு அமைதி ஏற்படுத்த அனுப்பிவைக்கப்பட்ட இந்தியா அமைதிப்படையின் ரா அதிகாரியாக ஜான் ஆபிரகாம் நடித்துள்ளார்.

விடுதலைப்புலிகளை தீவிரவாதிகளாக முத்திரை குத்தி, அவர்களை அழிக்கும் வேலையில் கதாநாயகன் ஜான் ஆபிரகாமும் ஈடுபடுகிறார். அப்போது ராஜீவ் காந்தியை படுகொலை செய்ய விடுதலைப்புலிகள் தரப்பில் வியூகம் வகுக்கப்பட்டு அவர் கொல்லப்படுவது போல் கதை முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிமேல் மின்சாரத்தை தேடி ஓட வேண்டியதில்லை! இருந்த இடத்திலே சார்ஜ் செய்யலாம்

இனிமேல் சார்ஜ் தீர்ந்துவிட்டால் மின்சாரத்தை தேடி ஓட வேண்டியதில்லை, இருந்த இடத்திலிருந்து கைபேசிகளுக்கு சார்ஜ் செய்து கொள்ளலாம்.

நம்மை சுற்றி எந்நேரமும் அலைவரிசைகள் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.எங்கோ ஒலிபரப்பாகும் ரேடியோவை கேட்க முடிகிறது, அதேபோல எங்கோ ஒளிபரப்பாகும் TV ஐயும் எம்மால் பார்க்க முடிகிறது. அதுமட்டுமா Wifi-யின் மூலம் மடிக்கணனியில் இணையத்தை பயன்படுத்தலாம். இவ்வாறு பல அலைவரிசைகள் எம்மைச் சுற்றி எப்பவுமே காணப்படுகிறது, காரணம் இதில் எலக்ட்ரான்கள் உள்ளது.



இதனைப் பாவித்து பற்றரிகளை சார்ஜ் செய்யும் சிப் ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இதனை கைபேசியில் புகுத்தினால், நாம் அவசரத்துக்கு சார்ஜ் செய்ய அலையவேண்டியது இல்லை. பற்றரி வீக் ஆனால், ஒரு பட்டனை அழுத்தினால் போதும். சார்ஜருடன் இணைத்தது போல அது சார்ஜ் செய்ய ஆரம்பித்துவிடும். அதிக மின்சாரத்தை அது உற்பத்திசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. அவசரத்துக்கு உதவும் வகையில் அது மின்சாரத்தை தயாரித்து பற்றரியை சார்ஜ் செய்யும் திறன் கொண்டது.

அதிலும் நாம் நல்ல சிக்னல் கிடைக்கும் இடங்களில் இருந்தால், அங்குள்ள Routers, TV சிக்னல்கள் மற்றும் ரேடியோ சிக்னல்களின் கதிர்களை அது பாவித்து மின்சாரத்தை உற்பத்திசெய்துவிடும். இதுபோன்ற சாதனங்கள் விரைவில் சந்தையில் வர உள்ளது, இது மிகவும் அதிசயமான கண்டுபிடிப்பு தான் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## பேபாலுக்கு நிகராக சேவையை அறிமுகப்படுத்தும் முயற்சியில் பேஸ்புக்

பல மில்லியன் கணக்கான பயனர்களை தன்னகத்தே கட்டிப்போட்டிருக்கும் பேஸ்புக் சமூகவலைத்தளமானது பாரிய விளம்பர சேவைகளையும் வழங்கிவருகின்றது.

இதனால் பணக்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள புதிய சேவை ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதாவது ஒன்லைன் மூலமான பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கு தற்போது பிரபல்யமாகக் காணப்படும் பேபால் நிறுவனத்தின் சேவைக்கு நிகராக இது அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மொபைல் சாதனங்களிலும் இச்சேவையை பயன்படுத்தக்கூடிய வசதி கிடைக்கப்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேலதிகமாக 1GB சேமிப்பு வசதியை வழங்கும் Dropbox

கிளவுட் ஸ்டோரேஜ் வசதியை வழங்கும் Dropbox ஆனது தனது பயனர்களுக்கான புதிய அறிவித்தல் ஒன்றினை நேற்றைய தினம் வெளியிட்டுள்ளது.இதன்படி மேலதிகமாக 1GB சேமிப்பு வசதியை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த வசதியினைப் பெறுவதற்கு Dropbox பயனர்கள் Mailbox கணக்கினை Dropbox உடன் இணைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஏற்கனவே இவ்விரண்டினையும் இணைத்துள்ளவர்கள் மீண்டும் இணைப்பதன் மூலம்(Reconnect) இந்த வசதியினைப் பெறமுடியும்.

# விளையாட்டுப் பையன்

## நீங்கள் பேஸ்புக்கிற்கு அடிமையானவரா?

தொடர்ச்சியாக பேஸ்புக் தளத்தினை பயன்படுத்திவருபவர்கள் தமது வாழ்வில் துக்கம் நிறைந்தவர்களாக வரக்கூடிய சாத்தியம் இருப்பதாக புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கின்றது. Michigan பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போதே இந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஆய்விற்காக வயது வந்த 82 பேர் சிறு குழுவாக சேர்த்து பயன்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களை நாள் ஒன்றிற்கு 5 தடவைகள் வீதம் 2 வாரங்களாக அவதானித்த பின்னர் கிடைத்த தகவல்களை ஒன்று திரட்டிய போது, பேஸ்புக் பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாண்மையானவர்கள் தனிமையில் இருப்பதாகவும், பேஸ்புக் பாவனையின் பின்னர் தமது சொந்த வாழ்க்கையில் இழந்த நேரங்களை நினைத்து கவலைப்படுவதாகவும் முடிவுகள் கிடைத்துள்ளது.

இதேவேளை நாள்தோறும் ஒரு பில்லியனுக்கு மேற்பட்டவர்கள் பேஸ்புக் தளத்தினை பயன்படுத்துவதாகவும் குறித்த பல்கலைக்கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## உலகை கலக்க வருகிறது Samsung-ன் Smart Watch

ஸ்மார்ட் கைப்பேசி, டேப்லட் உற்பத்திக்கு அடுத்தபடியாக ஸ்மார்ட் கைக்கடிகார உற்பத்தியில் கால் பதித்துள்ள Samsung நிறுவனம் Galaxy Gear எனும் ஸ்மார்ட் கைக்கடிகாரத்தினை வடிவமைத்து வருகின்றது.



இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ம் திகதி அறிமுகமாகலாம் என எதிர்பார்க்கப்படும் இக்கைக் கடிகாரம் தொடர்பான சில தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. இதன்படி 1.5GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Processor, 1GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளது. இவை தவிர 1.67 அங்குல அளவு, 320 x 320 Pixel Resolution உடைய தொடுதிரை, 2 மெகாபிக்சல்கள் உடைய கமெரா போன்றவற்றினையும் உள்ளடக்கியுள்ளது.

எனினும் இதன் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஒரு நாளைக்கு சுமார் 250 மில்லியன் மின்னஞ்சல்கள் அனுப்பப்படுகின்றன.
இணையம் பாவிக்கும் 50% மானவர்கள் Face Book இல் உள்ளனர்.
உலகின் மொத்த சனத்தொகையின் 17% மானவர்கள் face Book இல் உள்ளனர்.
தற்போது வரை சுமார் 637 மில்லியன் இணையதளங்கள் இணையத்தில் உள்ளன.

# ஒரு கொலையின் கதை

17 (மாயன்)

"அவனைக் கண்களால் கண்ட புலனாய்வாளரின் தகவல்களுக்கு ஏற்ப கணணியில் வரைந்து எடுக்கப்பட்ட அடையாளப் படமும் இணைக்கப் பட்டிருந்தது.........'

புலனாய்வாளர்கள் அனைவரது புலனாய்வு நடவடிக்கைகளும் ஒரே புள்ளியில் குவிந்தன.

ஏனைய எந்த வாய்ப்புக்களும் அவர்களுக்குக் கிடைக்கவேயில்லை. திட்டமிட்ட கொலையொன்றின் ஒரே தடயமான கையடக்கத் தொலை பேசியின் மீள்நிரப்பு அட்டை நிரப்பப்பட்டிருந்த அக் கைத்தொலை பேசியைத் தற்போது பாவித்துக் கொண்டிருக்கும் அலிக என்ற அந் நபரிலேயே புலனாய்வுப் புள்ளிகள் யாவும் குவிந்திருந்தன.

அலிகவைப் பற்றிய தகவல்கள் அடங்கிய விபரக் குறிப்பில் அடங்கிய தகவல்களுள் முக்கியமானது அவன் சில நாட்களுக்கு முன்னரேயே இலண்டனில் இருந்து திரும்பியிருந்தான் என்பது தான். அதைத்தவிர அலிகவைப் பற்றிய எந்த விதமான சந்தேகக் குறிப்புக்களும் அங்கில்லை.


புலனாய்வு நடவடிக்கைகளை அந்தக் கோணத்திலேயே ஆய்வு செய்யப் புலனாய்வாளர்கள் விரும்பினர். அதற்கு மிகமுக்கிய காரணமாக இருந்தது முன் இரவில் தொடங்கிப் பின்னிரவு வரை அலிக அத் தொலைபேசியைப் பாவிப்பது தான். அவ்வாறு கதைப்பது வெளிநாட்டுத் தொடர்பாடல் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொண்டனர் அவர்கள். எனினும் அந்த ஊகத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை சட்டரீதியாக முன்னெடுக்க முதலாவது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அவ்வாறு அலிக லண்டனுடன் தொடர்பாடலை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டால் லண்டனில் நடந்த ஏதோவொன்றுதான் இக் கொலைக்கான காரணமாக இருக்க வேண்டும் என அவர்கள் சந்தேகித்தனர்.

கேதீஸ் லண்டனில் இருந்த காலப்பகுதியில் அலிகவுடன் அவனுக்கு எந்த விதமான தொடர்பு இருந்திருக்க வேண்டும்? என அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினர்.

அதற்கு முதல் கேதீஸ் மற்றும் அலிக இருவரும் லண்டனுக்குப் பயணித்த காலங்களை அறிந்து கொள்ளும் தகவல்களைத் திரட்டும் முடிவு எடுக்கப்பட்டது.

அத் தகவல்கள் அவர்களுக்கு அதிர்ச்சியையே அளித்திருந்தன. ஏனெனில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்கள் இருவரும் லண்டனில் சந்தித்திருக்க வாய்ப்பு இருந்திருக்கவில்லை. அதன்படி கேதீஸ் நாட்டுக்குத் திரும்பிய பின்னரே அலிக லண்டன் நோக்கிப் பயணமாயிருந்தான்.



இந்த அதிர்ச்சித் தகவலின் பின்னர் அடுத்த சந்தேகமாக அவர்களுக்கு எழுந்தது லண்டனில் கேதீஸ் இருந்த காலப் பகுதியில் நடந்தேறிய வேண்டத்தகாத விளைவொன்றால் அவன் இலங்கைக்குத் திரும்பிய பின்னர் கொல்லப்பட டிருக்கலாம் என்பதே.

ஆனால் இலங்கை திரும்பி இரண்டு வருடங்களின் பின்னரே கேதீஸ் கொல்லப் பட்டிருந்ததால் அவ்வளவு காலம் ஏன் கொலையாளிகள் காத்துக் கொண்டிருந்தார்கள்? என்னும் சந்தேகமும் எழுந்ததுடன் கேதீஸ் பல்வேறு இடங்களுக்கும் இலங்கையில் பயணித்துக் கொண்டிருந்ததால் அங்கெல்லாம் வைத்து அவன் ஏன் கொல்லப் படவில்லை என்னும் கேள்வியும் அவர்களுக்கு எழுந்தது.

(அவர்களது சந்தேகங்களை திசைப்படுத்தும் விதமாக அலிகவின் கைத்தொலைபேசி அறிக்கை அலிகவின் கைத்தொலைபேசி லண்டனுடன் தான் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தமையை சட்டரீதியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தொலைபேசித் தொடர்பாடல் அறிக்கைகள் உறுதி செய்திருந்தன.) அவ்வாறாயின் இப்போதும் அலிகவுடன் தொடர்பிலுள்ள லண்டனில் இருக்கும் அந்த நபர் யார்?.......

அந்தத் தெலைபேசி அறிக்கைகள் மேலும் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டபோது மற்றொரு முக்கிய விபரத்தை புலனாய் வாளர்கள் அறிந்து கொண்டார்கள். அலிகவின் தொலைபேசியிலிருந்து கொலை நடந்த நாளுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னர் இருந்து குறித்த ஒரு தொலைபேசி எண்ணுக்கு பல தடவைகள் அழைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருந் ததுடன் அவ் எண்ணிலிருந்தும் பல தடவைகள் அலிக அழைக்கப்பட்டிருந்ததும் தெளிவானது.

உடனடியாக கொலை நடந்த நாளில் குறித்த எண்ணுடன் தொடர்பினை அலிக கொண்டிருந்தானா என ஆராய்ந்தபோது...........

ஆச்சரியமாக கொலை நடந்த மணித்தியாலங்களில் அவ் எண்ணை அலிக அழைக்கவில்லை என்பதுடன் அவ் எண்ணிலிருந்தும் அலிகவிற்கு அழைப்புக்கள் எதுவுமே வந்திருக்கவில்லை. ஆனால் கொலை நடந்த மணித்தியாலங்கள் சிலவற்றின் பின்னர் அத் தொலைபேசி இலக்கத்துடன் அலிக தொடர்பாடி யிருப்பதை அறிக்கைகள் வெளிச்ச மிட்டுக் காட்டியிருந்தன.

யாரந்த உள்ளூர் தொலை பேசியாளன்? ஏன் கொலை நடந்த மணித்தியாலங்களில் அவனுடன் அலிகவோ அல்லது அவன் அலிகவுடனோ தொடர் புகளை ஏற்படுத்தவில்லை? அதன் பின்னர் சில மணித்தியாலங்களில் ஆரம்பித்து அவர்கள் இருவரும் ஏன் அடிக்கடித் தொடர்புகளைக் கொண்டிருக் கின்றார்கள்....... எனக் கேள்விகளின் பட்டியல் நீளத்தொடங்கவே சந்தேக வளையத்திற்குள் புதிய புள்ளியொன்று விழுந்திருந்தது.

அந்த இலக்கத்திற்கு காவல்துறைக் கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து தொலைபேசி அழைப்பொன்று பறந்தது.

மறுமுனையில் கறகறப்பான குரலில் யாரோ 'கௌத கத்தாகரனவா' என்று அதட்டும் அருவருப்பான தொனி வெளிவர, கட்டுப்பாட்டு அலுவலகச் சமிக்ஞைகள் அந்த இலக்கம் ஒலிக்கும் பிரதேசம் 'கணேவல' என்பதைப் புள்ளியிட்டுக் காட்டின...

அந்த இலக்கத்தை பின்பற்றிச் செல்லும் முனைப்பு அவர்களுக் ஏற்பட்டது. யாரவன்? தெரிந்துகொள்ளும் அடுத்த படலம் ஆரம்பமானது. அவன்.... ஒரு உயரங்குறைந்தவன்....தேர்ந்தெடுத்து தவறான பழக்கங்களைச் சரியாகக் கற்றுக் கொண்டிருந்தவன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கல்முனை கார்மேல் பற்றிமாவை வீழ்த்தியது திருகோணமலை இந்துக்கல்லூரி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இரண்டாம் சுற்றுப்போட்டிகள் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது. திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினருக்கும் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரிக்கும் இடையிலான போட்டி கடந்த 20.08.2013 செவ்வாய்க்கிழமை அன்று ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 6 விக்கட் இழப்பிற்கு 352 ஓட்டங்களைப் பெற்றனர். ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய வே. தக்சனன் மிகச்சிறப்பானதொரு ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் 113 பந்துகளை எதிர் கொண்டு 29 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 149 ஓட்டங்களைப் பெற்றார். மேலும் க.கிரிசாந்தன் 43 ஓட்டங்களையும், வி.ஆகர்ஷ் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

353 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றிமா கல்லூரி 33 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். ஆரம்பம் முதலே சிறப்பாக தமக்கிடையே பந்து பரிமாற்றங்களை பகிர்ந்து கொண்ட ஹ.ரிஷிகீர்த்தணன் மற்றும் பே.பானுஷாந்த் ஆகியோர் முறையே 5 மற்றும் 4 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

தக்சனனின் சிறப்பான துடுப்பாட்டத்தாலும், ரிஷிகீர்த்தணன் மற்றும் பானுஷாந்த் ஆகியோரின் துல்லியமான பந்து வீச்சாலும் கோணேஸ்வரா இந்துக்கல்லூரி அணியினர் 230 ஓட்டங்களால் வெற்றி பெற்றனர்.

## எக்டிவ் கப் மென்பந்து சுற்றுப்போட்டி; மிகிந்தபுரம் சாம்பியனானது




லங்கா மில்க் புட்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற எக்டிவ் கப் மென்பந்து சுற்றுப்போட்டியில் மிகுந்தபுரம் கழகம் சம்பியனாகியுள்ளது. இரண்டாம் இடத்தினை வின்னிங் ஸ்டார் கழகம் பெற்றுக்கொண்டது. இப்போட்டி திருகோணமலையில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டன. இதில் 64 அணிகள் பங்குகொண்டன. அணிக்கு அறுவர் கொண்ட இச்சுற்றுப்போட்டி 5 பந்து பரிமாற்றங்கள் கொண்டதாக நடத்தப்பட்டது. சம்பியனான மிகிந்தபுரம் அணிக்கு 10,000 'ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டது. இரண்டாம் இடம்பெற்ற வின்னிங் ஸ்டார் கழகத்திற்கு 5,000 பணப்பரிசு வழங்கி வைக்கப்பட்டது. இவ் இரண்டு அணிகளுக்கும் பதக்கங்களும் சான்றிதழ்களும் விளையாட்டு சீருடைகளும் மேலதிகமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், திருகோணமலை நகரசபை தலைவர் க.செல்வராசா பிரதம அதிதியாகவும் திருகோணமலை மாவட்ட கிரிக்கட் சங்கத்தின் தலைவர் தி.பிரபாதரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துசிறப்பித்தனர். இதன் இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மிகுந்தபுரம் கழகம் 67 ஓட்டங்களை சகல விக்கட்டுக்களையும் இழந்து பெற்றனர். சம்பத் 29 ஓட்டம், சஞ்சீவ 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பதிலுக்கு விளையாடிய வின்னிங் ஸ்டார் கழகம் 5 விக்கெட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

## ஸ்பென்ட்ஸ் இனை வெளியேற்றி இறுதிக்குள் நுழைந்தது டைனமிக்ஸ்

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு டைனமிக்ஸ் கழகம் தெரிவாகி உள்ளது.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஸ்பென்ஸ் கழகத்தை எதிர்த்து டைனமிக்ஸ் கழகம் மோதியது. இதில் டைனமிக்ஸ் கழகம் 88 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டைனமிக்ஸ் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 50 பந்து பரிமாற்றங்களில் 48.2 பந்து பரிமாற்றத்தில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். அதிரடியாக ஆடிய எஸ்.கீதன் 56 பந்துகளுக்கு 48 ஓட்டத்தினையும், க.சுதன் 46 பந்துகளுக்கு 44 ஓட்டத்தினையும், ச.குமுதன் 18 பந்துகளுக்கு 31 ஓட்டத்தினையும் பெற்றுக் கொடுத்தனர். மேலும் விக்கட்டுக்கள் சரிந்த வேளையில் தனது நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய த.சங்கர் 71 பந்துகளுக்கு 37 ஓட்டத்தினையும் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ஸ்பென்ட்ஸ்கழகத்தின் சார்பில் கடந்த போட்டிகளில் பிரகாசித்த த.றிச்சர்ட் 10 ஓவர் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களை சரித்தார். மேலும் சி.தீபன் 10 பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டு 39 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும், ஆர்.சபீதன் 7 பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டு 32 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 201 என்ற ஓட்ட இலக்குடன் களம் புகுந்த ஸ்பென்ட்ஸ் கழகம் 36.3 பந்து பரிமாற்றங்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். ஸ்பென்ட்ஸ் கழகம் சார்பாக த.நிசாந்தன் 29 ஓட்டங்களையும், த.மதன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். கடந்த அனைத்து போட்டிகளிலும் ஸ்பென்ட்ஸ் கழகத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்ற ரிச்சர்ட் மற்றும் பிரசாத் ஆகியோர் இப்போட்டியில் பிரகாசிக்கத் தவறிவிட்டனர்.

பந்து வீச்சில் டைனமிக்ஸ் கழகத்தின் சார்பில் மிகச்சிறப்பாக பந்து வீசிய தயா 8.2 பந்து பரிமாற்றங்களுக்கு 22 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து 4 விக்கட்டுக்களை சரித்தார். மேலும் அவருக்கு சாதகமாக மறுமுனையிலிருந்து பந்து வீசிய குமுதன் 9 பந்து பரிமாற்றங்களில் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களை சரித்தார்.

இதன் மூலம் டைனமிக்ஸ் கழகம் 88 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளனர். ஏற்கனவே சோடியாக் கழகத்தை 29 ஓட்டங்களால் வெற்றி கொண்ட யங் ஒலிம்பிக்ஸ் கழகம் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
வருகின்ற 25ம் திகதி இறுதிப்போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தை, டைனமிக்ஸ் கழகம் எதிர்க்கின்றது.


யங் ஒலிம்பிக்ஸ்


டைனமிக்ஸ்

# நிறைவுறும் வருடமொன்றின் நினைவுகள் – 7
# "மலைமுரசின் ஓராண்டுப் பயணம்"

– ஆசிரியர் –

இம் மாணவப் பத்திரிகையாளர்கள் செய்திகளை பெற்றுக்கொள்வதுடன் அச் செய்திகளின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே ஆசிரிய பீடத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். அவர்கள் மலைமுரசின் பயண அத்தியாயங்களில் தங்களையும் உறுதியாகப் பிணைத்துக் கொள்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தாம் அனுப்பும் செய்திகள் அடுத்த வாரப் பத்திரிகையில் கட்டாயம் வெளியிடப்பட வேண்டும் என்பது மட்டுமே! வேறு எவ்விதமான பொருளாதார நன்மைகள் எவற்றையும் அவர்கள் எம்மிடம் எதிர்பார்ப்பதில்லை.

ஆரம்பக் கட்ட வளர்ச்சிகளில் மூதூரில் ஜெயகரன் ஆற்றிய பணிகள் அளவிட முடியாதவை. கட்டைப்பறிச்சான் மற்றும் சேனையூர் பிரதேசங்களில் மலைமுரசைக் கொண்டு சென்ற பெருமை அவரையே சாரும். அங்கிருக்கும் மக்களில் எமக்கென நிரந்தர வாடிக்கையாளர்களாகச் சுமார் ஐம்பது பேரை அவர் உருவாக்கியிருந்தார். மலைமுரசின் முதலாவது அலுவலகப் பயணமும் மக்கள் சந்திப்பும் அங்கேயே நிகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. அச் சந்திப்பின் போது கலந்துகொண்ட அனைவரது வேண்டுகோளும் மலைமுரசு தடைப்படாது வெளிவரவேண்டும் என்பதாகவே இருந்தது.

இன்று மலைமுரசு இரண்டாவது ஆண்டில் தனது பயணத்தைத் தொடர்கின்றது. ஆரம்பத்திலிருந்தே பலரின் முயற்சிகளாலும், அளவிடமுடியாத அர்ப்பணிப்புக்களாலும் மலைமுரசின் அத்தியாயங்கள் வரையப்பட்டுள்ளன. எமது இடையறாத இப் பயணத்தில் எம்முடன் இணைந்தது கொண்டவர்களில் சிலர் பல்வேறு காரணங்களால் இடைவிலகிச் செல்கின்றார்கள். பலர் புதிதாக இணைகின்றார்கள். பிரிதலின் வலியும், இணைதலின் மகிழ்வும் வாழ்வியலின் தவிர்க்க முடியாத "மாற்றம்" என்பதைக் காலம் உணர்த்திக் கொண்டேயிருக்கின்றது.



வாசகர்களின் ஆதரவே மலைமுரசின் இவ் வெற்றிகரப் பயணத்தின் அடிக்கட்டுமானமாக இருக்கின்றது. சில வேளைகளில் கோபப்படும் வாசகர்கள் எழுத்து பிழைகளுக்காக அழைப்புக்களை ஏற்படுத்தி மனமாரத் திட்டிய அனுபவங்கள் பலவற்றை ஆசிரியர் என்ற முறையில் நான் களிப்புடன் அனுபவித்திருக்கின்றேன். திட்டுதலில் என்ன களிப்பு வேண்டிக் கிடக்கின்றது என நீங்கள் எண்ணலாம். அத்திட்டுக்கள் யாவும் மலைமுரசின் மீது கொண்ட உரிமையால் தானே விழுகின்றன...

அண்மையில் பக்கங்களை அதிகரித்த போது வேலைப்பழுவின் அதிகரிப்பைக் கணக்கிட்டு சரியாக சனிக்கிழமை காலை நேரத்தில பத்திரிகையைக் கடைகளுக்கு வழங்க முடியாமல் சனி மாலை மற்றும் ஞாயிறு காலையிலேயே வழங்க முடிந்தது. சனி காலை பத்திரிகை கிடைக்காத ஒரு வயதான அம்மா அழைப்பெடுத்து "யாரைக் கேட்டுத் தம்பி பத்திரிகையை நிப்பாட்டிப் போட்டீர்" என்று கேட்டார்கள்.

மலைமுரசை ஆரம்பிக்கும் போது யாரிடமும் நான் கேட்கவில்லை. அன்று அப் பத்திரிகை என்னுடையதாக இருந்தது. தற்போது மலைமுரசு யாருடைய பத்திரிகை என்பதை அந்த அம்மா தன் கேள்வியால் நாசூக்காக எனக்குப் புரிய வைத்திருக்கின்றார்.

இப்போது தெரிகின்றது மலைமுரசு யாரின் பத்திரிகை என்பது.

இடைவெளிகளை இயற்கை விட்டுவைப்பதில்லை தானே...... எமது பயணம் தொடர்கின்றது...

இன்னும் முகிழ்க்கின்ற நந்நாட்களை நோக்கி.... பெரும் இடைவெளியொன்றை நிரப்பவென எழுப்பப்படும் கட்டுமாணத்தின் கல்லொன்றாய் மலைமுரசு..............

**நன்றி- உங்கள் ஆதரவிற்கு!!**

என்றும் அன்புடன்
இரா.ஸ்ரீஞானேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### மௌண்ட்லவேனியாவில் புதிய உல்லாச புரி

நெதர்லாந்தைச் சேர்ந்த கம்பனியொன்று பல மில்லியன் ரூபாய் பெறுமதியான கலப்பு அபிவிருத்தித் திட்டமொன்றின் ஊடாக மௌண்லவேனியா கடற்கரையை உள்ளடக்கிய உல்லாச புரி ஒன்று நிர்மானிக்க உள்ளது. சுமார் 642 ஏக்கர் நிலப்பரப்பில் கடல் மண்ணை நிரப்பி இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

சுமார் 280 அமெரிக்க மில்லியன் டொலர் செலவில் முன்னெடுக்கப்பட உள்ள இத்திட்டத்தின் முதலீட்டாளர்கள் ஏலவே சனாதிபதி மகிந்தராசபக்சவையும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கோத்தபாய ராசபக்சவையும் சந்தித்து உரையாடி உள்ளார்கள்.

இவ்வாண்டின் இறுதியில் செயற்படுத்தப்பட உள்ள இத்திட்டத்திற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கியூடாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### விமலின் மில்லியன் வீடுகளுக்கு அரச வங்கிகளின் மில்லியன் ரூபாய்.

ஒரு மில்லியன் வீடுகளை அமைக்கும் இலங்கை அரசின் திட்டத்திற்கு தேவையான பல மில்லியன் ரூபாய்களை அரச வங்கிகளில் இருந்து பெற்றக்கொள்ள அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியன முறையே 1200 மில்லியன் ரூபாய்களையும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் 500 மில்லியன் ரூபாய்களையும், அரச ஈட்டு முதலீட்டு வங்கி 150 மில்லியன் ரூபாய்களையும் இத்திட்டத்திற்கு ஒதுக்கவுள்ளது.

### வெலிவேரிய சம்பவம் — ஊடகவியலாளர்களையும் பொதுமக்களையும் அழைத்தது இராணுவம் —

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வெலிவேரியவில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் இராணுவம், அவ்விசாரணைகளுக்காக ஊடகவியலாளர்களையும், ஊர்மக்களையும் அழைத்துள்ளது. எனினும் அவ்விசாரணைக்கு ஊர்மக்களும், ஊடகவியலாளர்களும், சமுகம்தர மறுத்துள்ளார்கள்.

ஏனெனில் இவ்விசாரணை கொமாண்டோப்படையணி தங்கியுள்ள இராணுவ முகாமினிலேயே நடத்தப்படுவதால் ஆகும். மக்களின் மறுதலிப்பு மனிதவுரிமை ஆணைக்குழுவின் ஊடாக இராணுவத்தளபதிக்கு தெரியப்படுத்த பட்டவுடன் இராணுவத்தளபதி மக்கள் தமது வாக்கு மூலங்களை யாதாயினும் காவல்துறை அலுவலகம் ஒன்றில் பதிவு செய்ய முடியுமென புதிய கட்டளையொன்றை பிறப்பித்துள்ளார்.



### உசார்படுத்திய காவல்துறை

நிதிமோசடிகள் மற்றும் குற்றங்களில் வெளிநாட்டவர்கள் அதிகமாக ஈடுபடுவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சை காவல் துறை உசார் படுத்தியுள்ளது. இம் மோசடிகளில் பெருமளவினை சீனர்களும், தாய்வானியர்களுமே நிகழ்த்துவதாக காவல்துறை மேலும் தெரிவித்துள்ளது.

2010 ம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து யூலை 2013 வரையான காலப்பகுதியில் 136 வெளிநாட்டவர்கள் நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கைதாகியுள்ளனர். இவர்களில் 105 பேர் தாய்வானியர்களும் சீனர்களும் என்பது குறிப்பிடத்தக்கது. 26,404 வேலையனுமதி பெற்றுக்கொண்ட சீனர்கள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த டிசம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதந்த சீன புலனாய்வாளர்கள் 17 பேர் கொண்ட சீன மோசடிக் கும்பலை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் கீழ் சுமார் 100 சீனர்கள் கணினி வலைப்பின்னல் திருட்டின் ஊடாக சுமார் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை மோசடி செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

### யுனஸ்கோ எச்சரிக்கை

காலியின் வரலாற்று புகழ்பெற்ற கோட்டையினுள் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத கட்டுமான பணிகளால் அக் கோட்டை தனது உலகப்புகழை இழக்க நேரிடும் என யுனஸ்கோ இலங்கையை எச்சரித்துள்ளது. தேசிய மரபுரிமை அமைச்சினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதம் ஒன்றில் இவ் எச்சரிக்கை உள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காலியில் சர்வதேச துடுப்பாட்ட அரங்கிற்கு உரிய பார்வையாளர் இருக்கைகளை காலிக் கோட்டையை அண்டிக்கட்டியமை, காலித்துறைமுக விஸ்தரிப்பின் போது கோட்டைமீது ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் மற்றும் கோட்டை பிரதேசத்திற்குள் புதிதாக கட்டப்படும் வீடுகள் மற்றும் கடைகள் போன்றவற்றாலேயே காலிக் கோட்டை தனது மரபுப்பதிவை இழக்க நேரிட உள்ளதாக இக்கடிதத்தில் யுனஸ்கோ தெளிவுறுத்தியுள்ளது. அத்துடன் காலிக் கோட்டையின் உட்பகுதியில் உள்ள விடுதிகள் சில புனரமைக்கப்பட்டபோது அவ் விடுதிகளின் காலனித்துவ அழகும் அழிவடைந்து விட்டதாக மேலும் அமைச்சர் தெரிவித்தார்.

### சட்டமா அதிபரின் அறிவுறுத்தலை எதிர்பார்க்கும் காவல்துறை

நீதிமன்றதடையுத்தரவை மீறி கடந்த வாரம் கொழும்புக் கோட்டைப்பகுதியில் எதிர்கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட ஆர்பாட்ட நடவடிக்கையின் மீது சட்ட நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக சட்டமா அதிபர் ஆலோசனையை காவல்துறை எதிர்பார்த்துள்ளது. எதிர்கட்சி தலைவர்கள் அவ்வவ் கட்சிகளின் செயலாளர்கள் மீது சட்ட மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என, காவல்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

### முஸ்லிம் காங்கிரஸ் சோகம்

கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ள சில விடயங்களையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் தமக்கிருக்கின்ற உறவு தொடர்பாக இறுதி முடிவொன்றை எடுக்க வேண்டிய கடினமான நிலையொன்றுக்கு தள்ளப்பட்டுள்ளது என, முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் சமுதாயத்தினை பாதுகாப்பதற்கு அரசு நேரடியாக தலையிடாது விட்ட சில சந்தர்பங்களாகும். முஸ்லிம் சமுகத்திடம் இருந்து நெருக்குதல்களை தாம் எதிர்கொள்வதாக முஸ்லிம் காங்கிரஸ் மேலும் தெரிவித்துள்ளது.

### விரிவுரையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நாடுகடந்த தமிழீழ அரசால் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த " ஈழம் " நிகழ்வில் கலந்து கொண்டார்கள் என பாதுகாப்புப் படைகளின் தற்போதைய பிரதானியான ஜெனரத் ஜெகசூரிய அண்மையில் கருத்து வெளியிட்டு இருந்தார். இதனைத் தொடர்ந்து இந் நான்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீதும் அரசியல் சட்டத்தை மீறினார்கள் என்ற அடிப்படையில் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டு வருகிறது.

லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் தமது ஆராச்சிக் கட்டுரைகளை சமர்பிக்க பயணமான நான்கு விரிவுரையாளர்கள் மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

## The Sunday LEADER

### அதிகமான அமில அளவு

வெலிவேரிய கையுறைத் தொழிற்சாலையின் அயற்பகுயில் இருந்து எடுக்கப்பட்ட நீர் மாதிரிகளை ஆய்வு செய்த நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை, அந்நீரில் அமில அளவு அதிகரித்துள்ளதை உறுதி செய்துள்ளது. இத்தகவலை வெளியிட்ட இச்சபை கம்பஹா அரச அதிபரிடம் அவ்வறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது எனவும் njup ;J sS J. உலக சுகாதார நிறுவனத்தின் நியமங்களின்படி குடிக்கும் நீரின் pH அளவு 6 -7 ஆக இருக்க வேண்டும்.

ஆனால் எடுக்கப்பட்ட மாதிரிகளின் அதன் அளவு 4 ஆக இருப்பது தென்பட்டது.

### மூன்று பல்கலைகழங்களில் அறிக்கைகள் கோரப்படுகின்றன.

புலிகளின் அமைப்பொன்றால் ஏற்பாடுசெய்யப்பட்ட கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து லண்டன் நோக்கி புறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள மூன்று பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களின் விபரங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு திரட்ட முடிவெடுத்துள்ளது.

யாழ், பேராதனை, ஊவா பல்கலைக்கழகங்களில் இருந்து பயணித்திருந்த 4 விரிவுரையாளர்களுள் மூவர் விடுதலை புலிகளின் அமைப்பொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத் தொடரில் கலந்து கொண்டார்கள் என்று நான் தெரிந்து கொண்டுள்ளேன் என அவ்வாணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

### கனேடிய மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் இலங்கையில்

பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டினை நடத்தும் பணிகள் முழு வேகத்தில் நடந்து வரும் இத்தருணத்தில் அமெரிக்க மற்றும் கனேடியர் பிரதிநிதிகள் அவ்வேற்பாடுகளை பார்வையிடுவதற்கு வருகை தந்துள்ளார்கள். இப்பிரதிநிதிகளை மாநாடு நடைபெறும் கொழும்பு, ஹம்பாந்தோட்டை மற்றும் காலி பிரதேசங்களுக்கு அழைத்துச்சென்ற மாநாட்டின் படையணி அவர்களுக்கு மாநாட்டின் போதான இருப்பிடம், பாதுகாப்பு, பயண மற்றும் ஊடக ஏற்பாடுகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளது.

### தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் உள்நாட்டு பால் உற்பத்தி.

இறக்குமதி செய்யப்படும் பால் வகைகளின் விலைகளில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் உள்நாட்டுச் சந்தையில் பால் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதனால் உள்நாட்டில் அப் பால் உற்பத்திக்கு தட்டுப்பாடு எழுந்துள்ளது. வருடமொன்றில் 900 மில்லியன் லீட்டர் பாலை உறிஞ்சும் இலங்கையரின் உள்நாட்டு உற்பத்தி வெறும் 300 மில்லியன் லீட்டர்களே என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதனை எதிர்கொள்வதற்காக மேலும் 2500 பசுமாடுகளை அவுஸ்ரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யும் தீர்மானத்தில் இருப்பதாக அதற்கு பொறுப்பான அமைச்சு தெரிவிக்கிறது.

### உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை

லண்டனில் நடைபெறும் பிரிவினவாதத்தை ஊக்குவிக்கும் கூட்டத்தொடரில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்து கொண்டிருப்பின் அவர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ள

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

உயர்கல்வி அமைச்சு தயாராகி வருகிறது என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அவர்கள் மீது சட்டமீறல், மற்றும் ஒழுங்கீனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு உயர்கல்வி மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கள் அவ்விடயம் தொடர்பாக தனித்தனியே விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

சில விரிவுரையாளர்கள் லண்டன் செல்வதற்கான அனுமதியை பெற்றிருந்தாலும் அங்கு செல்லவில்லை எனத் தெரியவருகிறது.

ஆனால் அவ்வாறு செல்லாதவர்கள் தாம் செல்லவில்லை என்ற தகவலை தெரிவிக்கவில்லை என உயர்கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு


## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 05


பகுதி *II*

03. பொருள்களின் மீது விசை செயற்படும் போது, அவற்றின் இயக்கங்களில் மாற்றம் ஏற்படும். அந்த மாற்றங்களினால் பொருள்களின் கணித, இயல் நிலைகளை அறிய உதவும் பிரிவு இயக்கவியல் ஆகும்.

1. வேகமற்ற வீதம் எவ்வாறு அழைக்கப்படும்?
2. புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த $750,000 kg$ திணிவுள்ள புகையிரதம் பயணத்தை ஆரம்பித்து 10 நிமிடத்தில் வேறொரு புகையிரத நிலையத்தை அடைந்தது. இதற்கான வேக - நேர வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




   1) புகையிரதம் சீரான வேகத்தில் பயணம் செய்த நேரம் எவ்வளவு?
   2) புகையிரதம் பயணம் செய்த தூரம் எவ்வளவு?
   3) புகையிரதம் ஆர்முடுகி செல்ல தேவையான விசையைக் காண்க.
3. $54 Kmh^{-1}$ கதியில் இயங்கிக் கொண்டிருந்த மோட்டார் வாகனம் தடுப்பை பிரயோகித்தமையால் வேகம் சீராக குறைந்து 5 செக்கனில் ஓய்வுக்கு வந்தது. எனில், 5 செக்கன் புகையிரதம் பயணம் செய்த தூரம் யாது? இதற்கான வேக - நேர வரைபை வரைக.
4. $100 g$ திணிவுள்ள கண்ணாடிப் பாத்திரத்திலே $5 Kg$ நீர் இடப்பட்டுள்ளது. அதன் வெப்பநிலையை $30^{\circ} - 50^{\circ} c$ க்கு உயர்த்துவதற்கு $1500 w$ மின் உபகரனத்தினால் 12 நிமிடம் வெப்பமேற்றப்பட்டது.
   1) இதற்கு வேண்டிய வெப்பக்கணியம் யாது?
   2) சூழலுக்கு வெப்ப இழப்பு எவ்வளவு?
5. தன்வெப்பக்கொள்ளளவானது தரைக்காற்று, கடற்காற்று ஏற்பட ஏதுவாக அமைகின்றது. இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணத்தை விளக்குக.
6. ஆக்கிமிடிசின் விதியைத் தருக.
7. தோணி உட்குடைவதால் ஏற்படும் அனுகூலத்தை விளக்குக.
8. $5 Kg$ திணிவு கொண்ட பொருள் சாய்தளத்தின் உச்சியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. பொருள் நிலத்தை அடிக்கும் போது வேகம் யாது?





04. கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மூலம் இலங்கையில் பெருமளவு வருவாய் பெற்றுக் கொள்ளப்படுகிறது. எனினும் இவற்றினால் வெளிவிடப்படும் மாசுக்களினால் இயற்கைச் சூழல் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது. எனவே சூழல் பாதுகாப்பு பற்றிய கற்கை தற்போது மிக அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது.

1. சீமெந்து உற்பத்திக்கு பயன்படும் மூலப்பொருட்கள் எவை?
2. சீமெந்து உற்பத்தியில் சுழலும் சூளை எத்தனை பாகை சாய்வில் வைக்கப்பட்டு எவ்வளவு வெப்பநிலை வழங்கப்படும்?
3. சீமெந்து தயாரிப்பில் ஜிப்சம் சேர்க்கப்படுவதன் நோக்கம் யாது?
4. வெளிற்றுந்தூள் தயாரிப்பிற்கான தாக்க சமன்பாட்டைத் தருக.
5. கரும்பு வெல்லப்பாகிலிருந்து மதுசாரம் தயாரிப்பினை சுருக்கமாகத் தருக.
6. செங்கல் சுடப்படும் போது சிவப்பு நிறமாக மாறுவதற்கான காரணம் களிமண்ணில் காணப்படும் எம்மூலகமாகும்?
7. இறப்பர் பாலின் திரட்சி நிரோதிகளாக பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் 2 தருக.
8. இயற்கை இறப்பர் எவ் ஐதரோகாபனின் பல்பகுதியமாகும்?
9. இறப்பர் தொழிற்சாலைக்கு அருகில் பாயும் நீரோட்டங்களில் துர்நாற்றம் வீசுகிறது. இதனை விளக்குக.
10. இலங்கையில் இறப்பர் உற்பத்தி சம்பந்தமான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் எவை?

### பாடம் - கணிதம், 05

1. 5 பென்சில்களின் விலை ரூபா 75 ஆயின், ஒரு பென்சிலின் விலை யாது?
2. $160000 Kg$ ஐ $t$ இல் தருக.
3. $18^{\circ}$ இன் நிரப்புக்கோணம் எவ்வளவு?
4. $\sqrt{9}$ இன் பெறுமானம் யாது?
5. $(-3)\times 4$ ஐ சுருக்குக.
6. $7\%$ ஐ பின்னமாக எழுதுக.
7. $1000 cm^3$ ஐ $l$ இல் கூறுக.
8. சுருக்குக. $70.2 \div 9$
9. 3, 2, 1, 5, 4 எனும் தரவுக் கூட்டத்தின் இடை யாது?
10. $15:45$ ஐ எளிய விகிதமாக மாற்றுக.
11. சுருக்குக. $\frac{3}{a+b}+\frac{2}{b+a}$
12. 2, -1 ஆகிய மூலகங்களை கொண்ட $x$ இலான இருபடிச்சமன்பாடு ஒன்றை ஆக்குக.
13. $\lg 2 = x$, $\lg 3 = y$ எனின், $\log(3/8)$ இன் பெறுமானத்தை $x, y$ சார்பில் காண்க.
14. தீர்க்க. $3(a-4)=12$
15. ஒருவன் ரூ.30 பங்குகளை சமத்திலும் $10\%$ குறைத்து வாங்குவதற்கு ரூ 5400 ஐ செலவு செய்தான். அவன் வாங்கிய பங்குகள் எத்தனை?
16. ஒரு கூட்டல் தொடரின் $n^{th}$ உறுப்பு $7n-2$ எனின், 96 இத்தொடரின் எத்தனையாம் உறுப்பு எனக் காண்க.
17. $\Delta ABC$ யின் பரப்பளவு $27.6 cm^2$ ஆகும். $AC$ யின் நீளம் $12 cm$ எனின், $AD$ (செங்குத்து உயரம்) யின் நீளம் யாது?
18. $x^2 - 7x$ என்பதை நிறை வர்க்கமாக மாற்ற கூட்டவேண்டிய உறுப்பு யாது?
19. காரணி காண்க. $ax - ay - by + bx$
20. $x$ இன் பெறுமானம் யாது?




## சென்ற வார விடைகள்

01. 2. $\frac{12}{120}\times 100 = 10\%$ 3. $\frac{26}{91}$ 4. $\frac{6}{120} = \frac{1}{20}$

02. 1. $\frac{x+3+2x+1}{x-1}=5 \Rightarrow \frac{3x+4}{x-1} \Rightarrow 3x+4=5(x-1)$

$\Rightarrow 3x+4=5x-5 \Rightarrow 2x=9 \Rightarrow x=4.5$

2. $\frac{1}{s-a}+\frac{1}{s-b}+\frac{c}{s(s-c)}$

$$\frac{s(s-c)(s-b)+s(s-c)(s-a)+c(s-a)(s-b)}{s(s-a)(s-b)(s-c)}$$

$$\frac{s^3-s^2b-s^2c+scb+s^3-s^2a-s^2c+sca+s^2c-scb-sac+acb}{s(s-a)(s-b)(s-c)}$$

$$\frac{2s^3-s^2a-s^2b-s^2c+abc}{s(s-a)(s-b)(s-c)} \Rightarrow \frac{2s^3-s^2(a+b+c)+abc}{s(s-a)(s-b)(s-c)}$$

$$\frac{2s^3-s^2\times 2s+abc}{s(s-a)(s-b)(s-c)} \quad ;(a+b+c=2s)$$

$$\frac{abc}{s(s-a)(s-b)(s-c)}.$$

03. 1. $T_n = 2n+3 \Rightarrow T_1 = 5 \Rightarrow T_2 = 7 \Rightarrow T_3 = 9$

2. $T_{50} = (2\times 50)+3 = 103$

3. $101 = (2\times n)+3 \Rightarrow n = 49$

4. $S_n = \frac{n}{2}(a+l) \Rightarrow 25\times 108 = 2700$

04. 2. $7.4 cm$

3. சரிவகம் $(QS // PR)$

கணித, விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புளியங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

*பயிற்சி 5* *பாடம் - வரலாறு*

(11) இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்

1. கித்துல்கல,பாகியன்கல,பட்ட தொம்ப
2. பட்டதொம்ப,அலுலென,பெல்லன்பதிபெல்லச
3. பாகியன்கல,நில்கல,பெலிகல்கே
4. இராவணன் எல்ல,நில்கல,கித்துல்கல

(12) இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்ற துறைமுகம்

1. உருவெல 2. கோகண்ண 3. ஜம்கோளப்பட்டினம் 4. கொடவாய

(13) 1. எல்லாளன் A அசேலன்

2. சேனன்-குத்தின் B 2 ஆம் பராக்கிரமபாகு

3. கலிங்க மன்னன் C வலகம்பா

4. தாதிகன் D துட்டகைமுனு

மேற்படி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நாட்டை மீட்டவர்களின் சரியான ஒழுங்கு

1.ABDC 2.DABC 3.DACB 4.CDAB

(14) இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி

1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி 4. ஜேத்தவனராமய

(15) கலிங்க மாகனிடமிருந்து பாதுகாப்புப் பெற பிரதேச ஆட்சியாளரான சங்க என்பவனால் அமைக்கப்பட்ட நிலையம்

1.மினிப்பே 2.கோவிந்தமல 3.யாப்பகூவ 4.தம்பதெனியா

(16) குருணாகல் இராசதானி காலத்தில் வாழ்ந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக்கூடிய விடயம்

A பாண்டிய ஆரியச் சக்கரவத்தி புனித தந்ததாசவை அபகரித்துச் செல்லல்

B ராஜபுத்திர வீரர்களின் உதவியுடன் புவனேகபாகு ஆட்சி அமைத்தல்

C நிஸ்ஸங்க அழக கோணாரால் கோட்டை அமைத்தல்

D அம்புலுகல குமாரயா ஜோதிய இளவரசனின் கிளர்ச்சியை அடக்குதல்

1. AC 2. AB 3.AD 4.BC

(17) கண்டி இராசதானி கீழ் போர்த்துக்கேயரால் முன்னெடுக்கப்பட்ட போர்களை தலைமை ஏற்ற தளபதிகளின் சரியான ஒழுங்கு

1. தந்துரே A தியோகுத மெலோ

2. பலன B பேரோலோபேஸ் த மசூஸா

3. ரந்தெனிவெல C கொன்ஸ்தாந்தின் மசூஸா

4. கண்ணொருவ D தொன் ஜெரணிமோ அஸவேது

1. ACDB 2.BDCA 3.BDAC 4.ABDC

(18) இலங்கை வரலாற்றின் கடைசி சிங்கள மன்னன்

1. 2 ஆம் இராஜசிங்கன் 2. 1 ஆம் இராஜசிங்கன்

3. வீரபராக்கிரம நரேந்திர சிங்கன் 4. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(19) பின்வருவனவற்றுள் முதல் தேசிய அரசு

1. ஸ்பானியா 2. போர்த்துக்கல் 3. இங்கிலாந்து 4. ஒல்லாந்து

(20) இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும் நபர்

1. பீஸ்மார்க் 2. கரிபாஸ்டி 3. கவூண்கவர் 4. ஜோசப் மஸினி

(21) அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி

1. கலிங்கற்தொட்டி 2. சுருங்கை 3. அலைதாங்கி 4. கலிங்கல்

(22) பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்த எழுத்தாளர்

1. வோல்டயர் 2. கரிபால்டி 3. இராஸ்மஸ் 4. தாந்தே

*ஆசிரியர் :*

***த. அகிலன்,*** Dip. in Tech. (Merit)

*புனித மரியாள் கல்லூரி , திருகோணமலை*

*வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்*

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் 29

பிரதீபா

1. நீண்ட நாட்கள் வாடாத, வாசனையற்ற பூ பின்வருவனவற்றுள் எது?
   1. கடதாசிப்பூ 2. கொடிமல்லிகை 3. செவ்வந்திப்பூ
2. பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறு பைக்கட்டினுள் காணப்படும் பதார்த்தம் எது?
   1. சிலிக்கா ஜெல் 2. சுண்ணாம்பு 3. இரும்புத்தூள்
3. நெல் : பிட்டு என்பது போல பால் : ....................
   1. தயிர் 2. ஆடை 3. வெண்ணெய்
4. அதிகளவு கொழுப்புச் சத்தைக் கொண்ட பழவகை எது?
   1. ஆனைக்கொய்யா 2. விளாம்பழம் 3. மாம்பழம்
5. விற்றமின் $B$ , இரும்புச் சத்து என்பவற்றை உட்கொள்ளாதவர்களுக்கு ஏற்படும் நோய் எது?
   1. அனீமியா 2. மாலைக்கண் 3. வாந்திபேதி
6. சமையலுக்குப் பயன்படும் எண்ணெய் வகையொன்றை பெறும் தாவரம் எது?
   1. சூரியகாந்தி 2. கித்துள் 3. கற்றாளை
7. சிறு துளி பெரு வெள்ளம்
   1. சிறு துளிகள் சேர்ந்து பெரு வெள்ளமாகின்றது.
   2. சின்னச் சின்ன காரியங்கள் பெரிய காரியமாகின்றது.
   3. சிறுகச் சிறுக சேமித்தால் அது பெரும் செல்வமாகின்றது.
8. முட்டை : கோழி
   1. மாடு : பால் 2. பூமி : வானம் 3. மேகம் : மழை
9. எழுத்து : மை
   1. முகவரி : கடிதம் 2. தேநீர் : கோப்பை 3. சோறு : அரிசி
10. கொழும்புக்கு அண்மையில் உள்ள நகரம் நீர்கொழும்பாகும். இதில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் எதிர்ச் சொல்லைத் தெரிக.
    1. அருகில் 2. சேய்மை 3. தூரத்தில்
11. ஒவ்வொரு $10m$க்கும் ஒரு தூண் வீதம் நடப்பட்டுள்ளது. ஒரு வரிசையில் 20 தூண்கள் காணப்படின், முதலாவது தூணுக்கும் கடைசித் தூணுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
    1. 210 மீற்றர் 2. 200 மீற்றர் 3. 190 மீற்றர்
12. ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்குமுறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31வது பூஞ்செடியின் பெயர் என்ன?
    1. மல்லிகை 2. சாமந்தி 3. லில்லி
13. மாலை 3.30 மணியளவில் நான் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு திரும்பி வந்த போது எனது நிழல் என்னை பின்தொடர்ந்து வந்தது எனில், நான் எத்திசையை நோக்கி செல்கின்றேன்?
    1. கிழக்கு 2. மேற்கு 3. தெற்கு
14. ஒரு குழுவிலுள்ள நண்பர்கள் ஒருவருக்கொருவர் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்களை பரிமாறிக் கொண்டனர். இவர்கள் ஒரு வருடத்தில் 30 வாழ்த்து மடல்களை பரிமாறிக் கொண்டனர் எனில், வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்ட நண்பர்கள் எத்தனை?
    1. 4 2. 5 3. 6
15. ஒரு பையிலுள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை அதிலுள்ள அப்பிள்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். பையினுள் 4 அப்பிள் பழங்களை இட்டால், மாம்பழங்களின் எண்ணிக்கையும் அப்பிள் பழங்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பையில் உள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 8 2. 12 3. 32

# வாழ்த்துகின்றோம்



5ம் தர பலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அனைத்து மாணவச் செல்வங்களுக்கும், எமது மலைமுரசு பத்திரிகையின் சார்பாக இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பெயர்: ........................................................................
........................................................................
முகவரி: ........................................................................
........................................................................
........................................................................
பாடசாலை: ........................................................................

## ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் வழங்கும் பரிசுகளை வெல்லுங்கள்

*மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.*

கடந்த வார வினாக்களுக்கான விடைகள் - 28ம் பயிற்சி

1. 3 2. 2 3. 1 4. 2 5. 2 6. 1 6.1 7.3 8. 2 9. 1
10. 3 11. 1 12. 2 13. 3 14. 2 15. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விதவைகள் வாழ்வில் வசந்தம் வீசுமா?

நம்மை மண்ணிலே படைத்து அம்மண்ணிலே நமக்கு பசியின் போது உணவையும் தாகத்தின் போது நீரையும் உடலிலே ஏற்படும் நோய்களுக்கு அல் குர் ஆனில் அதற்குரிய அருமருந்தையும் அருளியிருக்கும் எல்லாம் வல்ல இறையோனின் மாபெரும் கிருபையை கொண்டும் கருணை நபி (ஸல்) அவர்களின் ஸலவாத்தைக் கொண்டும் ஆரம்பம் செய்கிறேன்.

உணரப்படாத தீமைகள் என்ற தலைப்பில் சமூகத்தில் விதவைகளுக்கு வாழ்வளிக்கும் முறை பற்றியும் அவர்களோடு நடந்து கொள்ளும் விதம் பற்றியும் எழுதலாம் என ஆசைப்படுகிறேன்.

எத்தனையோ மார்க்க சொற்பொழிவுகள் இடம்பெறுகின்ற போது விதவைகள் சம்மந்தமாகவும் அவர்கள் படும் வேதனைகள் பற்றியும் குறிப்பிடுவதில்லை. அது பெரும் குறையாக இருந்தது இன்று எனது ஆக்கத்தின் மூலம் மனக்குறை தீரும் என்று நினைக்கிறேன்.

" பெண்களின் பார்வையை கண்டபடி சுழலவிடாதே! அவற்றிற்கு திரைபோட்டுவை இது அவர்களுக்கு நிச்சயம் நன்மையை செய்யும் " (அல்ஹதீஸ்)

" விதவைகள் " சமூகத்தில் மிகவும் நலிந்து போனவர்கள் பட்டியலில் முக்கிய இடம் வகிப்பவர்கள் வாழ்க்கை துணையை இழந்து இன்பங்களையும் சுகங்களையும் தொலைத்து விட்டு " சோகந்தான் எனது வாழ்வின் முகவரியா என நினைத்து எதிர்கால வாழ்வைப் பற்றி நம்பிக்கை இழந்து நிற்பவர்கள் மறுவாழ்விற்காக காத்திருப்பவர்கள். இப்படி இயற்கை அழிவுகளாலும், குண்டு வெடிப்பு சுனாமி இனவாத பிரச்சனை போன்றவற்றால் கணவனை இழந்த விதவைப் பெண்கள் நம் சமுதாயத்தில் எத்தனைபேர் கவலையோடு மனமுருகி பெருமூச்செறிவிட்டு " அவனே தந்தான் அவனே எடுத்துக் கொண்டான் " என்று கூறிக்கொண்டு கண்களில் கண்ணீர்பெருகிய வண்ணம் இருக்கும் பெண்கள் எத்தனைபேர் நாளடவில் நம் கண்களில் காண்கின்றோம்.



ஆண்கள் தவறு செய்தாலும் தண்டனை பெற்று விதவைப்பட்டம் சுமப்பது பெண்கள்தானே! இவ்வாறு நம் சமுகத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த விதவைப் பெண்களை பற்றி சிந்திப்பவர்களும் அவர்களுக்காக உழைப்பவர்களும், கருணை காட்டக்கூடியவர்களும், மிக அரிதாகவே காணப்படுகின்றார்கள்.

சுயநலவாதிகளாக இப்படி உடல்ரீயாகவும், மனரீதியாகவும், பாதிப்படைந்த இந்த பெண்களுக்கு உரிய துணையைத் தேடிக்கொடுப்பது, மறுமணம் செய்து வைப்பது அல்லது வாழ்வுக்கான வழியை ஏற்படுத்திக் கொடுப்பதே சிறந்த வழியாகும். சமூகத்தில் உள்ள ஒவ்வோரினதும் கடமையாகும்.

" உங்களிலே (பெண்களிலும் ஆண்களிலும்) மணமாகாது தனித்தவர்களாய் இருப்பவர்களுக்கு மணம்முடித்து வையுங்கள் " இப்படியான அவலநிலையில் தனித்து வாழும் இளம் பெண்களுக்கு நல்வழிகாட்ட வேண்டும். அவர்கள் மேல் அன்பு, கருணை காட்ட வேண்டும். என்பது முக்கிய அம்சமாகும். " விதவை " என்ற காரணத்தை முன்வைத்து அவர்களது சம்மதமில்லாமல் அவர்கள் விரும்பாத வாழ்க்கைகுள் தள்ளிவிட முடியாது. கட்டாய திருமணம் செய்து வைக்கவும் கூடாது. அவர்களின் உணர்களுக்கும் கட்டாயம் மதிப்பளிக்க வேண்டும்.

" ஓர் அன்னிய ஆணும் ஓர் அன்னிய பெண்ணும் தனித்துவாழ மார்க்கத்தில் அனுமதியில்லை " தனித்து வாழும் விதவைப் பெண்கள் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்த வேண்டும் அவர்களின் மனக்குறைகளை புரிந்து கொண்டு உதவிபுரிய வேண்டும்.

" பூமியில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள் அல்லாஹ் உங்கள்மீது இரக்கம் காட்டுவான் " (அல்குர்ஆன்)

இவ்வாறு அல்குர்ஆன் மிக அழகாகக் கூறுகிறது.

கன்னிப் பெண்ணை அவளது அனுமதி பெறாதவகையில் திருமணம் செய்து வைத்தல் ஆகாது. ஆனால் ஒரு விதவைப் பெண்ணுடன் கலந்து ஆலோசிக்காமல் அவளுக்கு திருமணம் செய்து வைக்கக் கூடாது. என நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டதும் முதிர்ச்சித்து விழும் இயல்பு பெண்மைக்கே உரியது. பெண்கள் வெட்கம் நிறைந்தவர்கள் பொறுமை மிக்கவர்கள் தனித்து வாழும் விதவைப் பெண்களுக்கு அன்பு, கருணை, பாசம் காட்ட வேண்டும் மாறாக அவர்களை இழிவுபடுத்தக் கூடாது.

மனைவியரை இழந்து தனித்து வாழும் ஆண்கள் கணவனை இழந்த விதவைப் பெண்ணுக்கு வாழ்வளிக்க முன்வர வேண்டும். தற்கால நம் சமுகத்தில் காணப்படும் ஆண்கள் இளம் பெண்களையே தெரிவுசெய்கின்றனர் இந்த விதவைப் பெண்களின் நிலை என்ன? சற்று சிந்தித்து பாருங்கள் சகோதரர்களே!

இளம் பெண்ணை திருமணம் செய்யவதற்கு முன்வருகின்றவர்கள் கணவனை இழந்து தனித்துவாழும் விதவைப் பெண்ணுக்கு வாழ்வளித்தால் என்ன? எல்லாம் பெண்தானே! அந்த பாதிக்கப்பட்ட பெண்கள் எவ்வளவு கவலையோடும், கனவுகளோடும், கண்ணீரைச்சுமந்து கொண்டு பிள்ளைகளோடும், கைக் குழந்தையோடும் வாழ்கின்றனர். அப்படி வாழ வழியின்றி வாழும் விதவைப்பெண்களுக்கு வாழ்வளித்தால் எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் அத்தோடு இறைவனின் அருளும் வாழ்வில் அபிவிருத்தியும் உண்டாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

## கவலை படாதே....... விடியலைத்தேடி....

" விடியற்காலை அருகில் இல்லையா? அல்குர்ஆன் (11.81)
நிச்சயமாக இறைவனது உதவி அருகில் இருக்கிறது. அல்குர்ஆன் (2.214)
விடியலுக்காக காத்திருப்பது மிகச்சிறந்த வழிபாடு (நபிமொழி திர்மிதி)
கவலையில் துக்கத்தில் அகப்பட்டவனது விடியல் அதோ மின்னுகிறது எனவே விடியலுக்காக நீ கொஞ்சம் காத்திரு.

"கயிறு மிகவும் இறுக்கமானல் அறுந்துவிடும்". (அரேபியப் பழமொழி) எனவே உன்னை நெருங்கினால் இறுக்கினால் விடியலை எதிர்பார் விரைவில் உன்வாழ்வில் நல்ல வழிபிறக்கும் என்பதை அறிந்துகொள். நிச்சயமாக துன்பத்துடன் இன்பம் இருக்கின்றது. (அல்குர்ஆன் 94:6)
நபிகளார் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் அறிந்து கொள் பெருமையுடன் வெற்றியுண்டு வலியுடன் சுகமுண்டு (முஸ்னத் அஹ்மத்)
ஓர் அரேபிய கவிஞர் பாடுகிறார்.
சிலவற்றை நினைத்து சில கண்கள் விழித்திருக்கின்றன. சில கண்கள் உறங்குகின்றன. அவை நடை பெறலாம் அல்லது நடைபெறாமல்கூட போகலாம் எனவே இயற்கை வரை நீ கவலையை விடு நீ கவலைகளை சுமப்பது அறிவீனம். நேற்று உனக்கு உதவிய இறைவன் இன்றைக்கும் உனக்கு உதவ போதுமானவன்

வேறொரு கவிஞர் பாடுகிறார்
நினைவுகள் அதற்குரிய பாதையில் செல்லட்டும் விடு! நீ தெளிவான மனதுடனேயே உறங்கு கண்சிமிட்டும் நேரத்தில் இறைவன் ஒரு பொருளை ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாற்றி விடுவான் கவலைப்படாதே! ஏனெனின் நீ கவலையுடன், விரத்தியுடன் இருக்கும் போது நீ சேமித்து வைத்திருக்கும் செல்வங்களும், உயரமான மாளிகைகளும், பசுமையான தோட்டங்களும் உனது கவலையையும், துக்கத்தையும் மேலும் அதிகப்படுத்தும்.

ஒரு தமிழ் பாடல் கூறுகிறது
" ஒவ்வொரு பாடலுமே சொல்கிறது
வாழ்வென்றால் போராடும் போர்களமே ஒவ்வொரு விடியலுமே சொல்கிறது
இரவானால் பகலொன்று வந்திடுமே
நம்பிக்கை என்பது வேண்டும் - எம் வாழ்வில்
இலட்சியம் நிச்சயம் வெல்லும் - ஒரு நாளில்
மனமே ஓ மனமே நீ மாறிவிடு
புயலோ பனிமலையோ நீ மோதிவிடு. "

இந்த பாடல் வரிகள் அழகான கருத்தை உணர்த்தி நிற்கின்றது. எவ்வளவு கஷ்டங்களும் வரலாம் அதற்கு ஒரு விடிவு உண்டு என்கிறது. எனவே மனிதா! கவலை படாதே! உனது கையில் பிராத்தனை இருக்கிறது.

இறைவனது வாயிற்படிகளில் மன்றாடு அவனது வாசலில் கையேந்து. இரவின் கடைசி மூன்று பகுதிகளில் ஒருபகுதி உன்னிடம் உள்ளது. அவன் திரு முன் விழுந்து வணங்கி இறைவனிடம் முறைப்படும் மதிப்புமிக்க நேரமும் உன்னிடம் இருக்கிறது. கவலைப் படாதே.

ஏனெனில் இறைவன் உனக்காகவே இந்த பூமியையும் அதில் உள்ள வற்றையும் படைத்துள்ளான். உனக்காகவே அழகான தோட்டங்களையும் உருவாக்கியுள்ளான். அவற்றில் பலவகைப்பூக்களையும் சிருஸ்டித்துள்ளான். அடுக்கடுக்காய் கனிகள் நிறைந்த குலைகளை உடைய [illegible] மரங்களையும் ஏற்படுத்தியுள்ளான்.

மனிதா உனது வாழ்க்கை மூன்று நாட்களுக்குரியது.
1. நேற்றைய நாள் - அது முடிந்து விட்டது
2. நாளைய நாள் - அது இன்னம் வரவில்லை
3. இன்றைய நாள் - அதுதான் நீ வாழும் நாள் இதில் அல்லஹ்வை பயந்து கொள். மனிதனே உன் வாழ்க்கையில் கவலை ஏன். கடலலைகள் கரையை வந்தடைவதுண்டு அது போல் உன்வாழ்வில் விடியலும் வந்தடையும்.

R.டிபான்

## நாளும் ஒரு நபிமொழி.

### பலப்பரீட்சை

நபி (ஸல்) அவர்கள் ஒருமுறை எங்கோ சென்றுகொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் சிலர் கூடிநின்று பலமான ஒரு பாறையை எடுத்து தத்தமது பலத்தை பரீட்சை செய்து கொண்டும் போட்டியிட்டுக் கொண்டும் இருப்பதைக் கண்டார்கள்.

அப்பொழுது இந்தப்பாறையை விட சுமையான பலமான ஒரு பொருள் இருக்கிறது அதில் பலப்பரீட்சை செய்து பார்பதுதான் மிக்க ஏற்றதாகும். என்று கூறினார்கள். மக்கள் அது என்ன? என்று கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் ஏதேனும் காரணமாக இரு சகோதரர்களுக்கு மதியில் விரோதம், பகை ஏற்பட்டது. அந்தநேரத்தில் அவ்விருவர் மீதும் ஷைத்தான் மிகைத்துவிட்டால் அந்நேரத்தில் அவ்விருவரில் ஒரு சகோதரர் (தற்காலிக அந்தஸ்து, இழிவு ஆகியவற்றை பொருட்படுத்தாமல் அல்லாஹ்வின் திருப்பொருத்தம் மட்டுமே நாடி ) மற்ற தனது சகோதரரிடம் சென்று சமரசம் செய்துக் கொள்வதாகும். (அதற்கு மன்னிப்பு கேட்க வேண்டியது வந்தாலும் சரி).

அல்லது எவருக்காவது கடுமையான கோபம் ஏற்பட்டு (அந்தக் கோபத்தை தீர்த்துக் கொள்ள சக்தி பெற்றிருந்தும்) அல்லாஹ்வுக்காக பொறுத்துக்கொண்டார். ( இதுதான் தங்களது திறமைகளையும் பலத்தையும் வெளிப்படுத்தும் இடமாகும்.)

அக்கரைச்சேனை
பாத்திமா ராஜா நிபார்.

### சிந்தனைக்குச் சில

◆ வயிறு நிரம்பிவிட்டால்
1. சிந்தனை தூங்கிவிடும்
2. ஞானம் ஊமையாகிவிடும்
3. உறுப்புகள் வணக்கத்தை விட்டுவிடும்

◆ நான்கில் சுகம்
1. உடலின் சுகம் உணவைக் குறைப்பதில்
2. ஆத்மீக சுகம் பாவங்களைக் குறைப்பதில்
3. மனதின் சுகம் கவலையை குறைப்பதில்
4. நாவின் சுகம் பேச்சை குறைப்பதில்.

◆ நான்கு விடயங்களில் மதிப்பை நான்கு போர்கள்தான் அறியமுடியும்
1. வாலிபத்தின் மதிப்பை வயோதிபர்கள்தான் அறியமுடியும்
2. சுகத்தின் மதிப்பை துன்பமுள்ளவர்கள்தான் அறியமுடியும்
3. உடல்நலத்தின் மதிப்பை நோயாளிகள்தான் அறியமுடியும்
4. வாழ்க்கையின் மதிப்பை இறந்தவர்கள்தான் அறியமுடியும்.

U.M.நளீப்(f)
நத்வதுல் உலமா அரபுக்கல்லூரி
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கிலிருந்து...

முதல்தடவை அவரைத் தொடர்பு கொண்ட போது அவர் மிக ஆவேசமாகப் பத்திரிகைகளைத் திட்டித் தீர்த்தார்.

தாம் இவ்வாறு தெரிவிப்பதைப் பத்திரிகையில் பிரசுரிக்கும் படி கேட்டுக்கொண்ட அவர், பத்திரிகா தர்மமற்ற முறையில் பத்திரிகைகள் தமக்கு எதிராகச் செயற்பட்டு தம்மீது சேறு பூச முனைவதாகத் தெரிவித்ததுடன் இவ்விடயம் தொடர்பாக தனக்கு எவ்வித தகவலும் தெரியாது எனக் கூறினார்.

பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்காகப் பாடுபடும் தனக்கு இவ்வாறான செய்தியொன்று தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ள போதும் அதனை வாசிப்பதற்குக்கூட நேரமில்லை என்றும், யார் எதனைச் செய்தாலும் தாம் அவற்றைக் கணக் கெடுக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

அவ்வாறாயின் இவ்விடயம் தொடர்பாக உங்களுக்கு தெரியுமா? தெரியாதா? என மீண்டும் வினவிய போது தம்மை அச்சுறுத்திக் கேள்வி கேட்பதாகக் கூறித் தொடர்பைத் துண்டித்தார்.

சில மணி நேரங்களின் பின்னர் தாமாகவே தொடர்பை ஏற்படுத்திய அவர் தேசியப் பத்திரிகைகள் ஊடாகவே இவ்விடயம் தமக்குத் தெரிய வந்ததாகவும் தாம் எப்போதுமே இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லையென்றும், இவ்வாறான பல முயற்சிகள் முன்னெரெல்லாம் எடுக்கப்பட்ட போது தானே முன்நின்று அம் முயற்சிகளைத் தடுத்து நிறுத்திய வரலாற்றை மலைமுரசு அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவித்தார். தேவையில்லாத விடயங்களில் பத்திரிகை தலையிடுவது அவ்வளவு நல்லதல்ல என அவர் மலைமுரசிற்கு அறிவுரையினையும் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரும், திருகோணமலை மாவட்ட தமிழத்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியுமான திரு.தண்டாயுதபாணி அவர்களை மலைமுரசு தொடர்புகொண்ட போது இவ் விடயத்தை தாம் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதாகவும் அவ்வாறான முயற்சிகள் யாவற்றையும் தாம் அடியோடு எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் மலைமுரசிற்குத் தகவல் தருகையில் திருகோணமலை வளாகத்தை இராசரட்டைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதனை கடுமையாக எதிர்த்திருந்த கிழக்கு மற்றும் திருகோணமலைக் கல்விச் சமூகம் அம் முயற்சி கைவிடப்பட்டதைத் தொடர்ந்து ஆசுவாசப்பட்டிருக்கும் வேளையில் தற்போது மற்றொரு பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் முயற்சி நடைபெறுவதாக எழுந்துள்ள செய்திகளை ஏற்கத்தக்கதாக இல்லை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது.

இம்முயற்சியானது ஒரு தேவையற்ற முயற்சியாக இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது. தேசியப் பல்கலைக்கழகமொன்றின் கீழ் தற்போது இயங்கிவரும் திருமலை வளாகத்தை மற்றொரு தேசியப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் மாற்றுவதென்பது எவ்விதத்திலும் பொருத்தப்பாடு அற்றது என்றே கிழக்கின் கல்விச்சமூகம் கருதுகின்றது.

1950களில் திருகோணமலையில் பூரணமான பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது. எனினும் நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமைகளால் அம்முயற்சி பலனை அடையவில்லை. ஆனால் 1993ல் இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியாகத் தொழிற்படத் தொடங்கி 15.06.2003ல் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கீழ் திருமலை வளாகம் உருவாக்கம் பெற்றது. தற்போது அவ் வளாகம் வியாபாரக்கற்கை மற்றும் தொடர்பாடல்துறைப் பீடத்தையும், பிரயோக விஞ்ஞான பீடத்தையும், சித்தமருத்துவத் துறையையும் கொண்டமைந்துள்ளன.

ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போதுவரை அபிவிருத்திப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் இவ் வளாகத்தை ஏன் கிழக்குப் பல்கலைக் கழகத்திலிருந்து மற்றொரு பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டு வரும் தேவை எழுந்தது என்பது புரியாத புதிராகவே இருப்பதாகத் தெரிவித்த அவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கீழ் திருமலை வளாகம் செயற்படுமானால் மட்டுமே கிழக்கின் வளங்களை ஒன்றிணைத்து கிழக்கின் மாணவச் சமூகத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் ஒளியூட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொண்டார்.

அதனையொட்டி இம் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நடவடிக்கையாக எதிர்வரும் 27ம் திகதி நடைபெறவுள்ள கிழக்கு மாகாணசபைக் கூட்டத்தொடரில் தான் ஒரு தனிநபர் பிரேரணையை முன்வைக்கப் போவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் இப் பிரேரணையை அனைத்து கிழக்குப் பிரதிநிதிகளும் கட்சி பேதமின்றி வரவேற்பர் என்றே தான் நம்புவதாகவும், அப் பிரேரணை நிறைவேற்றப்படுமிடத்து அதன்பால் உயர் கல்வி அமைச்சுக்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் இவ்வாறான நிர்வாக மாற்றத்தைத் தடுத்து நிறுத்தும்படி வேண்டுகோள கடிதங்கள் தபாலிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயத்தை தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருமலை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.சம்பந்தன் அவர்கள் அறிந்துள்ளாரா? என வினவியபோது அவர் இவ் விடயத்தை அறிந்திருப்பதாகவும் திருமலைக்கு வந்தவுடன் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருப்பதாகத் தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இம் மாற்றம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. சந்திரகாந்தன் அவர்களுடனும், பிரதி அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. முரளீதரன் உடனும் தொடர்புகளை ஏற்படுத்த மலைமுரசு முயற்சித்த போதும் அம்முயற்சி பத்திரிகை அச்சேறும் வரை கைகூடவில்லை.

## திருமலையில்...

நவிபிள்ளை அவர்கள் 28ம் திகதி காலையில் மாகாண ஆளுனரைச் சந்தித்த பின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

அதன் பின்னர் மாவட்ட உயர்மட்டப் பிரமுகர்களுடன் தமது கலந்துரையாடலைத் தொடரவுள்ள அவர் மாலையில் கிளிவெட்டி முகாம் நோக்கிச் செல்வார் எனத் தெரிகின்றது.

நவி பிள்ளை கிளிவெட்டி நோக்கிச் செல்லவுள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டுள்ள அரச அதிகாரிகள் கிளிவெட்டி முகாமைச் சீராக்கும் பணியில் கடுமையாக ஈடுபடுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர் கிராமசேவையாளர்கள் அனைவரும் பிரதேசச் செயலாளரின் பணிப்புரையின் கீழ் கிளிவெட்டி முகாமிலேயே சேவையிலிருப்பதாகவும் உரிய பிரதேச மக்களால் அவர்களை அவர்களது அலுவலகங்களிற் சந்திக்க முடியாதிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவித்தார். (கீத்) (ஜவாஹிர்)

### இந்திய மீனவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை

எல்லை மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ள மறுத்த மீனவர்களை எதிர்வரும் 28ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப் பட்டுள்ளது.

இந்திய மீனவர்களில் 31 பேர் அத்துமீறி புல்மோட்டைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை கைதாகினர்

இவர்களை கடந்த 21ம் திகதி விசாரணைக்கு அழைத்த போது அவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்ததால் தொடர்ந்தும் விளக்கமறியலுக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

(கீத்)

## மூதூரில் ...

ஏ.எம்.ஹரீஸ் தலைமையில் முக்கியஸ்தர்களின் அவசர கூட்டமொன்று மூதூர் பிரதேச சபையில் இடம்பெற்றது.

மூதூர் பிரதேசசபை உறுப்பினர்கள், மூதூர் மஜ்லிஸ் அஸ்ஸுறா உறுப்பினர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள், மூதூர் பொலிஸ் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதன்போது இக்குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு மூதூர் காவல்துறையினர் சகல முயற்சியையும் மேற்கொள்வதெனவும், இனிவரும் காலங்களில் இத்தகைய செயற்பாடுகளை தடுப்பதற்கு பொலஸாரும், இராணுவத்தினரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு, மூதூர் வர்த்தக சங்க பிரதிநிதிகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஒத்துழைப்பதெனவும் இனிவரும் காலத்தில் வாராந்த சந்தை இடம்பெறும் இடங்களில் மாத்திரம் நடைபாதை வியாபரிகளை அனுமதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை மோப்ப நாயின் உதவியுடன் பெண்ணொருவர் குழந்தையுடன் சந்தேகத்தின் பேரில் கைதாகியுள்ளார்.



## உயர்தரப்...

பாடசாலையில் இரசாயனவியல் ஆசிரியராக பணியாற்றும் நிலைமையிலும் குறித்த 28 வருட சேவைக் காலத்தைக் கொண்ட ஆசிரியை அந் நியமனத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

அம் மேற்பார்வையாளர் நியமனத்தை ஏற்றுக்கொள்ளும் முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற தகைமைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டத்திற்கும் பங்குபற்றியிருந்த அவ் ஆசிரியை க.பொ.த உயர்தரப் பரீட்சையின் முதலிரண்டு நாட்களிலும் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியுள்ளார்.

அவ்விரு நாட்களிலும் முறையே இணைந்த கணிதம் மற்றும் உயிரியல் ஆகிய விஞ்ஞான பாடங்கள் நடந்தேறிய நிலையில் திடீரெனத் தான் விபத்தடைந்துள்ளதாகக் கடிதமொன்றைச் சமர்ப்பித்து அம் மேற்பார்வையாளர் பணியிலிருந்து விலகியுள்ளார். அதன் பின்னர் அவருக்கு அடுத்த நிலையிலிருந்த உதவி மேற்பார்வையாளர் மேற்பார்வையாளராகப் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார்.

விடயம் வெளியாகியதைத் தொடர்ந்து மலைமுரசின் அலுவலகத்திற்கு வருகைதந்த சம்பந்தப்பட்டவர்களுடன் அளவலாவிய போது இச் செயல் ஒரு தவறல்ல என்றும் தற்செயலாக நிகழந்தது என்றும், தாம் மன விபத்தடைந்ததாலேயே இப் பணியிலிருந்து விலகியதாகவும் தெரிவித்திருந்தனர்.

மேலும் செய்தி வெளியாவதைத் தடுக்கும் கடும் முயற்சியில் ஈடுபட்டதுடன் செய்தி வெளியாகுமாயின் தாம் தற்கொலை செய்து கொள்வோம் என அச்சுறுத் தலையும் விடுத்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்லாண்டுகால சேவைக்காலம் கொண்ட ஒருவர் இவ்வாறு பணியாற்றக் கூடாது எனத் 'தமக்குத் தெரியாது எனக்கூறியதும், விபத்தடைந்ததாக கடிதமொன்றைச் சமர்ப்பித்து இரண்டு நாட்களுக்குப் பின் பணியிலிருந்து விலகியதும், இச் செய்தி வெளிவரவிடாமல் தடுக்க முயற்சித்ததும் பரீட்சை மண்டபத்தில் மோசடிகள் ஏதேனும் நிகழ்ந்துள்ளதா? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந் நியமனத்திற்குப் பொறுப்பான வலய அலுவலரைத் தொடர்பு கொண்ட போது தன்னுடைய தவறும் அதிலிருப்பதை ஏற்றுக்கொண்ட அவர் பலவருட சேவைக்காலங் கொண்ட ஆசிரியைக்கு இவ்விடயம் தெரியாதிருப்பதையிட்டு அதிர்ச்சியடைவதாகவும் தெரிவித்திருந்தார்.

அவ் ஆசிரியை மேற்பார்வையாளராகப் பணியாற்றிய பரீட்சை நிலையத்தில் குளறுபடிகள் நடந்ததாகத் தெரிவித்து உரிய பாடசாலையின் அதிபரும் மாணவிகளும் கடிதமொன்றை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வரைந்திருப்பதாகவும் அக் கடிதம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ)

## உண்மையை.....

பொருட்டு எதிர்வரும் 22ம் திகதி துறை சார்ந்த நிபுணர்களும், நீர்ப்பாசன உயரதிகாரிகளும் நேரில் வந்து பர்வையிட உள்ளனா?.

துர்நாற்றத்துடன் சுகாதார சீர்கேடுகளை விளைவிக்கக் கூடிய வகையில் காணப்பட்ட கோணவத்தை ஆற்றங்கரைப் பிரதேசம் இன்று மக்களின் பொழுது போக்கு இடமாகவும், போக்குவரத்து செய்யக்கூடிய வசதிகளும் கொண்டமைந்ததாக இருந்து வருகின்றது. இங்கு பரீட்சாத்தமாக சூரிய சக்தி மின்னொளி வழங்கப்பட்டுள்ளது. மேலும் சூரிய சக்தியில் இயங்கக் கூடிய 200 மின் கம்பங்கள் அமைப்பதற்கும், மண்ணரிப்பு மேற்கொள்ளப்படாத வகையில் ''கெபியொன்'' வலை அமைப்பும் செய்யப்படவுள்ளது. இதற்கான நிதியுதவிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 'வழங்கி வருகின்றது.

அதிகாரங்கள் கிடைக்கின்ற போது நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணங்களோடு செயற்பட வேண்டும். நானும் எமது தலைவர் அமைச்சர் அதாஉல்லா அவர்களும் நல்ல எண்ணத்தோடுதான் இந்தப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செய்திருக்கின்றோம். எனக்குக் கிடைத்த இந்த அமைச்சுப் பதவியுடாக மூன்று இன மக்களுக்கும் சேவை செய்த திருப்தி எனக்குள்ளது. இன்று சிலர் எனது சேவைகளைப் பற்றி பொறாமைப் பட்டவர்களாக அறிக்கைகளை விடுகின்றனர்.

இது பிரதேசவாதத்தை தூண்டி அரசியல் சுயலாபம் தேடும் முயற்சியாகவே கருதுகின்றேன். மாகாண சபை உறுப்பினர் தவம் தேசிய காங்கிரஸில் இருந்த போது இத்திட்டத்தை வரவேற்றுப் பேசியதுடன் இதன் ஆரம்ப நிகழ்வுகளிலும் கலந்து கொண்டுள்ளதை நீங்களே அறிவீர்கள். தற்போது முதலாம் கட்டமாக இடம்பெற்று வரும் இப்பணியினால் சில பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான சந்தர்பம் உள்ளது. இவை தவிர்க்க முடியாததாகும். திட்டம் நிறைவுபெறும் வேளையில் இதன் பூரணமான நன்மையினை அடைய முடியும். மேலும் இப்பணியின் காரணமாக போக்குவரத்து செய்வதற்கான பாதைகள் அமையப்பெற்றுள்ளதுடன் வெறும் சேற்று நிலங்களாகவும், தரிசு நிலங்களாகவும் இருந்த காணிகள் இன்று பல இலட்சம் ரூபாக்களுக்கு விலை போகின்றது. நெற்செய்கைக் காணிகளின் விளைச்சலும் அதிகரித்துள்ளது என்றார்.

மேலும் கட்சி மாறிய தற்காக உண்மைகளை எப்படி மறைக்க முடியும். நல்லவைகளைச் செய்கின்றபோது மாற்றுத்தரப்பினர் விமர்சிக்கத்தான் செய்வார்கள். அதற்காக எமது வேலைத்திட்டங்களை இடைநிறுத்த மாட்டோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிலையைப் பார்த்து மிகக் கவலையடைகின்றேன். இந்தக் கட்சியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர்கள் நாங்கள். முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கலர் என்ன என்று தெரியாதவர்கள் கூட இன்று அறிக்கை விடுகின்ற அவலத்தைப் பார்க்கின்றோம்.

எனது அமைச்சினூடாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினருக்கு கூடுதலான உதவிகளைச் செய்திருக்கின்றேன். கட்சி என்பதற்காக மற்றவர்களை புறக்கணிக்கின்றவன் நானில்லை.

சிரேஸ்ட உறுப்பினர்களின் வெற்றியை ஹக்கீம் விரும்பவில்லை. இதுதான் முனாபிக்தனம். தோல்வி அடைவார்கள் எனக் கருதப்பட்ட தவம் மற்றும் நசீர் ஆகியோர் வெற்றி பெற்றனர். இதுதான் ஹக்கீமுக்குத் தேவை. இவ்வாறான வேலைகளை எமது தலைமை செய்யாது என்றார்.

(மீனோடைக்கட்டு பைஷல் இஸ்மைல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ந்தது மட்டு - அம்பாறை எல்லைப் பிரச்சனை



நீண்டகாலமாக மட்டக்களப்புக்கும் அம்பாறை மாவட்டத்துக்கும் இடையில் நிலவிவரும் எல்லை பிரச்சனைகள் காரணமாக பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக எல்லைப்பகுதியில் அம்பாறை மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததன் காரணமாக நிர்வாகம் மேற்கொள்ளும் அதிகாரிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் இரு மாவட்டங்களின் எல்லைப் பகுதிக்கு சென்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆகியோர் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடியதுடன் எல்லைப் பகுதிகளையும் பார்வையிட்டனர்.

தற்போது எல்லை மீள் நிர்ணயம் தொடர்பாகத் துரித கதியில் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

# மட்டு - பட்டதாரிகளுக்கு செப்டெம்பரில் நிரந்தர நியமனம்

## அமைச்சர் முரளீதரன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுனர்களாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பணியாற்றி வருபவர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பான நிரந்தர நியமனங்கள் செப்டெம்பர் முதலாம் திகதி கிடைக்கப்பெறும் என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அரச அலுவலகங்களில் கடந்த ஒரு வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிவரும் பட்டதாரிப் பயிலுனர்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ளவர்களுக்கு செப்டெம்பர் முதலாம் திகதியும், ஏனைய அமைச்சுக்களில் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு கட்டங்கட்டமாகவும் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்த பட்டதாரிகளின் நியமனங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் வழங்கப்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாவை நிறைவு செய்தவர்களுக்கு ஏனைய மாவட்டங்களில் நியமனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பட்டதாரி நியமனங்களின் போது அரசாங்க அதிபர் மிகவும் சிரத்தையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டிருந்தார்.


அதனாலேயே அனைத்து பட்டதாரிகளையும் நியமனங்களுக்குள் உள்வாங்க முடிந்தது. அத்துடன் அவருடைய மாவட்டத்தின் அபிவிருத்திசார் ஒத்துழைப்புகளுக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரம் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற விடயத்தில் நமக்கிருக்கும் அரசியல் பலமே முக்கிய மானதாகும். எமது மக்கள் அரசியல் பலத்தினை பயன்படுத்தாமல் விடுவது கவலையான விடயமாகும். கடந்த தேர்தலில் பட்டதாரிகளாகிய நீங்கள் கூட சிந்தித்து வாக்களிக்கவில்லை.

அரசியலானது கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், அபிவிருத்தி, சுகாதாரம் என அனைத்து விடயங்களிலும் பங்களிப்புச் செய்யக் கூடியதாகும். அதனால்தான் அரசியலை அரசியல் விஞ்ஞானம் என்று கூறுகிறார்கள்.

அந்த விஞ்ஞானத்தை சிந்தித்துப் பயன்படுத்துபவர்களாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அதனை மட்டக்களப்பு மாவட்டத்தை வைத்து மாத்திரமே நீங்கள் சிந்தித்துப்பார்க்க முடியும். கடந்த காலங்களின் வரலாறுகளை எடுத்துப்பார்தீர்களானால், ஆளும் கட்சி அரசியல்வாதிகளாலேயே அபவிருத்திகள் பலமேற்கொள்ளப்பட்டுள்ளன" என்றார்.

# புணானை மக்கள் மீளக்குடிறேயத் தடை ஏன்?



## இரா.துரைரெட்ணம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புணானையில் இருந்து 1990 ம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக் குடியேறுவதற்கு இராணுவத்தினரும், பௌத்த பிக்கு உட்பட பலர் தடையாக இருந்து வருவது தொடர்பில் அரசாங்க அதிபர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கேட்டுக் கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர், கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கு பகிரங்க மடல் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

90ஆம் ஆண்டுகளில் யுத்தம் காரணமாக ஏற்பட்ட பாதுகாப்புப் பிரச்சனைகளால் புணானைப் பிரதேசத்தில் இருந்து பத்து சிங்கள, முஸ்லிம் குடும்பங்களும் 43 வரையான தமிழ் குடும்பங்களும் இடம் பெயர்ந்திருந்தன.

இக்குடும்பங்கள் மட்டக்களப்பின் பல இடங்களிலும், வெலிக்கந்தை, மன்னம்பிட்டி, கொழும்பு, அவிசாவளை எனப் பல பிரதேசங்களிலும் உள்ள உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் வாடகை இருப்பிடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், இவர்கள் பிரதேச செயலாளரிடம் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய வனபரிபால திணைக்களத்தினருடனும் பிரதேச செயலாளர் பேசி 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு அதில் குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இப்போதைய நிலையில் இப்பிரதேசத்துக்கு மக்கள் அங்கு குடியேறுவதற்காகச் செல்லும் வேளையில் இராணுவத்தினரும், பௌத்த பிக்குவும் தடை விதித்து வருகின்றனர். இதனால் இம் மக்கள் தாம் செய்வதறியாது நிற்கின்றனர். இந்த வருடத்தில் கடந்த 15ஆம் திகதி உட்பட 3 தடவைகள் இவர்கள் தடுக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் அப்பிரதேசத்திற்கு அருகில் பௌத்த பிக்கு இராணுவத்தினரின் உதவியுடன் அப்பிரதேசத்தில் வசிக்காத 20 வரையான குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு ஏனைய வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அப்பிரதேசத்தில் பௌத்த பிக்குவால் விகாரை ஒன்று அங்கிருந்த பிள்ளையார் கோயிலை அகற்றிவிட்டு அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளரும் மேற்கொள்ள வேண்டிய மீள்குடியேற்ற செயற்பாட்டினை இராணுவத்தினர் எவ்வாறு தடுக்க முடியும்.

எனவே அரசாங்க அதிபரும், பிரதேச செயலாளரும் நேரடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு மீளவும் குடியேறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வரும் இந்த மக்களுக்கு உதவிகளைச் செய்து தரவேண்டும் எனவும் கேட்டுள்ளார்

# இலங்கையின் சிறந்த பெண்மணி




மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களுக்கு இவ் வருடத்துக்கான சிறந்த பெண்மணி விருது வழங்கப்படவுள்ளது.

பெண்களுக்கான முகாமைத்துவ நிறுவனத்தினால் இவ்விருது வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் இவ்வருடத்தில் துறை சார் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் பலருக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தொழில் துறைசார் அபிவிருத்தி களையும், பெண்களின் முன்னேற்றங் களையும் ஊக்குவிக்கும் வகையில் 2011 ஆம் ஆண்டு முதல் பெண்களுக் கான முகாமைத்துவ நிறுவனத்தினால் வருடா வருடம் இவ் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மூதூர்ச் சிறுவனுக்கு நடந்தது என்ன?

மூதூர் ஆனைச்சேனையைச் சேர்ந்த 12 வயதான றஹீத் அக்மல் என்ற சிறுவன் காணாமற் போய் மறுநாள் மீட்கப்பட்டுள்ளான்.

மூதூரில் இருந்து கடந்த 22ம் திகதி திருகோணமலை வடகடல் வீதியிலுள்ள அரபிக் கல்லூரிக்குப் படிப்பதற்காக வருகை தந்தவர் அன்றைய தினம் காணாமல் போயிருந்தார்.

மறுநாள் அவரை மீட்டு காவல்துறையினர் மூதூர் வைத்திய சாலையில் மருத்துவ சிகிச்சைகளுக்காக அனுமதித்துள்ளனர். ஆரம்பக் கட்டத்தில் தன்னை நீல நிற வானில் வந்தவர்கள் கடத்தியதாகவே சிறுவன் தெரிவித்து உள்ளான். விசாரணைகள் தொடர் கின்றன.


படர்க்கை

திருகோணமலையிலிருந்து வெளிவர இருக்கும்
கலை, இலக்கிய, கல்விப் பண்பாட்டுச் சஞ்சிகை

தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, அல்லது நேரிலோ
தங்கள் ஆக்கங்களை சமர்ப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 159A, 2ம் மாடி,
கடல்முக வீதி,
திருகோணமலை.
0777555738
0754252042
padarkkai@hotmail.com


திருகோணமலை நகர வினியோகப் பிரதிநிதிகள் : நகர லியோ கழகம், 306 C1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல: 159A, கடல்முக வீதி திருகோணமலையிலுள்ள ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியினால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.